

# வாசகன்

## இதழ் – 3



2015

# முன்னுரை

யா/ஊர் புனித அந்தோனியார் கல்லூரியின் 2015ம் ஆண்டிற்கான தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டி செயற்பட்டு வரும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு செயற்பாடாக "வாசகன் இதழ் 3" எனும் கலைப்பூவை இவ் சஞ்சிகையை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ் சஞ்சிகையை வாசிப்பதன் மூலம் வாசகர்கள் வாசிப்பின் முக்கியத்துவத்தையும், நூலகப் பயன்பாட்டையும் இலகுவில் அறிந்து கொள்வர் என நம்புகின்றோம்.

நன்றி ---

"நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்"

"அறிவே ஆற்றல்"

"வாசிப்பை உரமாக்கி, தெளிவாக்கி வாழ்வில் முன்னேற்றம் கண்டிடுவோம்"

நூல் : வாசகன் இதழ் 03

வெளியீடு : நூலகம்
யா/புனித அந்தோனியார் கல்லூரி

பதிப்பு : ஐப்பசி 2015

இதழாசிரியர் : செல்வி ம. ஆன்டிலானி
செல்வி ச. ஜெனா

Title : Vasakan Ithal 03

Published by : Library
St, Antony's college.

Published on : october 2015

Editor : Miss. M. Anne Dilani
Miss. S. Jena



# பொருளடக்கம்



| இல. | உள்ளே...... | பக்கங்கள்......... |
|---|---|---|
| 01. | நூலகம் ஓர் அறிமுகம் | 01 ⇒ 11 |
| 02. | தமிழின் சிறப்பு | 12 ⇒ 13 |
| 03. | அனைவருக்கும் கல்வி | 14 ⇒ 17 |
| 04. | வாசிப்பின் அவசியம் | 18 ⇒ 24 |
| 05. | வாசிப்பின் அவசியமும் முக்கியத்துவமும் | 25 ⇒ 27 |
| 06. | சொல்வளத்தை பெருக்கும் வாசிப்பு | 28 ⇒ |
| 07. | விடுதலை வாசகம் | 29 ⇒. |
| 08. | இளைய தலைமுறை | 30 ⇒ 31 |
| 09. | பாடசாலைகளில் நூலகங்கள் | 32 ⇒ 35 |
| 10 | நல்ல நூல்களைக் கற்போம் | 36 ⇒ 38 |
| 11. | நூலகம் | 39 ⇒ 40 |
| 12. | இன்றைய சிந்தனைக்கு | 41 ⇒ |
| 13. | எனது எதிர்காலம் | 42 ⇒ |
| 14. | "வாசிப்பு மனிதனை பூரணமாக்கும்" | 43 ⇒ 44 |
| 15. | புத்தகம் படிக்கும் பழக்கம் | 45 ⇒ 46 |
| 16. | புத்தகமாதம் ஒருபோதும் சுமையல்ல | 47 ⇒ 48. |

# நூலகம் ஓர் அறிமுகம் -------

ஒரு நாட்டின் கல்வி அபிவிருத்தியின் பெருமளவு வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி வருவன அந்நாட்டில் இருக்கக் கூடிய நூலகங்களே ஆகும். நாட்டு முன்னேற்றத்தின் அபிவிருத்தியில் முக்கியம் பெறும் நூலகத்தின் ஆரம்பம், வரலாறு, வளர்ச்சி என்பவற்றை அறிதல் மிகவும் முக்கியமானதொன்றாகும். ஆரம்பகால அறிவியல் துறையில் ஒரு திரண்ட உண்மை வடிவங்களாக காணப்பட்ட அவ்வப் பிரதேசக் கல்வி அறிவின் பரம்பலுக்கும், பாரம்பரியங்களை பரிமாற்றும் பீடங்களாகவும் அவற்றிற்கு அடிப்படையாகவும் அமைந்தனவையே நூலகங்கள் ஆகும்.

நாகரிகம் வளர்ச்சியடையத் தொடங்கிய காலம் முதற் கொண்டே மனிதன் அறிவை விருத்தி செய்வதில் ஈடுபடத் தொடங்கி விட்டான். சிந்தனை வளர்ச்சி கொண்ட வேளையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. நாடோடி வாழ்க்கையை கைவிட்டு நிலையான வாழ்வுக்கு அடி எடுத்து வைத்தான். நாகரிக வாழ்வு முறையை பின்பற்றினான். தேவைகளை இனங் கண்டான். புதியன பிறந்தன. அறிவியற் துறை வளர்ச்சி கண்டது. இதனைத் தொடர்ந்து அடையப் பெற்ற பல சாதனைகளும், கண்டு பிடிப்புக்களும், அனுபவங்களினதும், அறிவியற் கூறுகளினதும் திரண்ட வடிவமே ஆவண சாலைகளின் வளர்ச்சிக்கு வழிவிட்டது. இவ் வளர்ச்சியே அவன் இறக்கும் வரை அவனை வழிநடத்தும் சாதனமாக அமைந்தது. இச் சாதனமே நூலகங்கள் என்பதற்கு பொருத்தமானது. ஒரு காலப் பகுதியின் வெற்றி, அறிவு, தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாடு, நாகரிகம் அனைத்தும் இன்னொரு கால கட்ட வளர்ச்சிக்குப் பயன்படுமேயானால் அங்கே ஒரு ஆவண சாலை, நூலகம், அவசியமானதாகவும் பிரதான இடத்தை வகிப்பதாகவும் அமைய வேண்டும்.

எனவே தற்கால நவ வளர்ச்சி கல்வி அபிவிருத்தி, மனித முன்னேற்றம் என்பன நிகழ்வு பெறுவதற்கு ஒவ்வொரு கால கட்டத்திலும் இருந்திருக்கக் கூடிய எழுத்து முறை, பேச்சு வழக்கு, தொழில்நுட்ப முறை, வளர்ச்சி அடைந்து வரும் நகரங்களுக்கு வேண்டிய அடிப்படை அம்சங்கள் அனைத்தும் ஆவண சாலைகளில் / நூலகங்களில் சேகரிக்கப் பட்டிருந்தன. ஒரு தேசத்தின்

நாகரிகம், மனிதப் பண்பாடு என்பன எத்துணைக்கு மிகப் பழமை வாய்ந்தனவாகக் காணப்படுகின்றதோ அதே அளவிற்கு நூலகங்களது தோற்றமும் பழமை வாய்ந்தது. எழுத்து ஆதாரங்களே அறிவியல் என்னும் நாகரிகத்தை இணைக்கும் சாதனமாக அமைந்தது. இந்த எழுத்தின் வரலாறே நூலக வரலாற்று ஆரம்பம் எனக் கூறுவது பொருத்தமானது.

உலகின் எழுத்தின் வரலாற்றைப் பண்டைய பரிமாணத்தை நாகரிகங்களில் காண முடிகின்றது. அசீரிய எகிப்திய கிரேக்க நூலகங்களும் ரோமை, அராபிய நாகரிக மையங்களும் உலகிலேயே மிகப் பெரிய புராதன அறிவியல் மையங்களாக ஆரம்ப நூலகங்களாக நாகரிகமடைந்த மக்களின் சிந்தனைக்கும், செயற்திறனுக்கும் பயிற்சி அளிக்கும் களங்களாகச் செயற்பட்டிருந்தன. இந்தப் பயிற்சி களங்களிலேயே மக்கள் ஒன்று கூடி வழிபாடு இயற்றும் மடாலயங்கள் / சமயத் தளங்களே நூலகங்களாக ஆரம்பத்தில் பணியாற்றின. இந்தியாவின் சிந்தனைவெளி எழுத்துக் கலை தொடர்ந்து கி.மு 4ம், 5ம் நூற்றாண்டுகளில் பாணினி என்கின்ற நூலாசிரியர் வாழ்ந்த காலப்பகுதியில் பல சுவடிச் சாலைகள் தொழிற்பட்டுக் கொண்டிருந்தமையை அவரது நூலான "அஷ்டாத்தியாயி" என்ற இலக்கண நூலின் மூலம் அறிய முடிகின்றது. கி.பி 5ம் நூற்றாண்டுப் பகுதியில் புராதன இந்தியாவில் சில மகாயான பௌத்த நிறுவனங்கள் தத்தமக்குரிய நூல்களைப் பேணிப் பாதுகாத்தன. என்பதனை சீனப் பயணியான பாகியானின் பிரயாணக் குறிப்பின் மூலம் அறியலாம்.

புராதன இந்தியாவில் நூலக நடவடிக்கையைப் பொறுத்து 10ம் நூற்றாண்டுக் காலமானது ஒரு திருப்பு முனையாக அமைந்தது எனலாம். தென் இந்தியாவைப் பொறுத்த மட்டில் தமிழ் நாட்டிலே சோழப் பேரரசின் தோற்றமும், வளர்ச்சியும் பல்வேறு துறைகளிலும் சிறப்பாக அமைந்தது. போன்று நூலகக் கல்வி நடவடிக்கைகளிலும் சிறப்பான ஒரு திருப்பு முனை என்று சொல்லலாம். பண்டைய கல்வி முறையில் குரு - சீட முறையிலேயே இடை நிலைக் கல்வி வரை கற்பிக்கப்பட்டது. மாணவர் தேவைக்கு நூலகம் பயன்படவில்லை. குருவே நூலகமாகவும், ஆசிரியனாகவும், வழிகாட்டியாகவும் தொழிற்பட்டார். ஆனால் உயர் கல்வி நிறுவனங்களில் நூலகங்கள் நிறுவப்பட்டு ஆராய்ச்சி தேவைக்குப் பயன்படுத்தப் பட்டன. இவற்றிலிருந்து நூலக வளர்ச்சியின் முக்கியத்துவம் உணர முடிகின்றது. கி.பி 12ம் நூற்றாண்டின் பின் முஸ்லிம்களினதும் மொகலாயர்களினதும் ஆட்சியானது. பல்வேறு பண்பாட்டுத் துறையில் ஏற்படுத்திய மாற்றங்களைப் போல் நூலகவியல் நடவடிக்கையிலும்

மாற்றத்தைக் கொண்டு வந்தது.

கி.பி 19ம் நூற்றாண்டில் நவீன நூலகம் ஐக்கிய அமெரிக்காவில் பொஸ்டன் நகரில் 1854ல் உருவாக்கப்பட்டது. 1880ல் ஸ்கொட்லாந்தில் பிரிட்டன், கனடா போன்ற இடங்களிலும் அன்ட்ரூ கார்னகி என்பவரது அயரா முயற்சியினால் பொது நூலகங்கள் தோற்றம் பெற்றன. இவ்வாறு கீழைத்தேய நூலக ஆரம்ப வளர்ச்சிக்கு எழுத்துக் கலை எவ்வாறு புராதனமோ அதே போன்றே மேலைத்தேய நூலக வளர்ச்சியாலும் காண முடிகிறது.

கருத்துத் தொடர்புச் சாதனமாகச் செயற்பட்ட எழுத்தும் அவற்றின் பயன்பாடும் நூலகம் என்னும் ஆவணக் காப்பகப் பணியிட்டன. இதன் பின் எழுத்துக் கலையின் நவீன கண்டுபிடிப்பாகக் கடதாசியும் அதன் பாவனையும் அரேபியா, ஐரோப்பா, ஸ்பெயின் வரை எடுத்துச் செல்லப்பட்டது. ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றி மறையும் இயல்புடைய மனிதனின் சிந்தனைகள், நினைப்புக்கள், உணர்வுகள் ஆகியவற்றைச் சிறப்பாக உருவம் கொடுத்து நிரந்தரமாக்கும் ஆற்றல் வாய்ந்த எழுத்தின் கண்டுபிடிப்பே நூலகங்களினதும் அவற்றின் வரலாற்றினதும் ஒரு கால் கோளாக அமைந்து விட்டது. இவ்வாறு நாமும் நம் நாட்டுக் கல்வி வளர்ச்சியாலேயே பொருளாதார வளர்ச்சி தங்கியுள்ளது என்பதை உணர்ந்து கல்வி அறிவைப் பெருக்கவும் வளர்க்கவும் முயற்சித்தனர். அதன் பயனாக அறிவை வளர்க்கும் இடங்களாக நூலகமும், நூல்கள் அமைந்துள்ள நூலகங்களும் என்ற கருத்தில் கொண்டு நூலக வளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் அயராது பாடுபட்டமை உலகெங்கும் நூலகங்கள் தோன்றக் காரணமாக அமைந்தது.

மனித நடத்தை இயல்புக்கான அறிவின் வளர்ச்சியானது அது கற்றல், பட்டறிவு ஆகியவற்றின் விளை பொருளாகும். அறிவுத் திறனும், மொழியும், கற்றலையும், பட்டறிவையும் பரிமாறவும் தொகுக்கவும் மிகுந்த ஆற்றலை அளிக்கின்றன. மனிதக் கூட்டு, செய்தித் தொடர்பு ஆகியன இணைந்து சமூகத் தொடர்பை ஏற்படுத்திச் சமுதாய உருவாக்கத்திற்கு உதவுகின்ற அதே வேளை நூலகத்திற்கும் அடிப்படையாகின்றன. இவ்விரண்டிற்கும் இடையே செயல் முறைத் தொடர்பை நூலகம் வெளிப்படுத்துகிறது.

சுருங்கக் கூறின் நூலகமானது சமூக உறுப்பினரின் அறிவு, கலை, நம்பிக்கை, ஒழுக்கம், சட்டம், பழக்க வழக்கம் முதலியவை சம்பந்தமாக சமூக வளர்ச்சிக்கு உதவும் ஒரு நிறுவனமாக விளங்குகின்றது.

மனித சிந்தனைப் பதிவேடுகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து நமக்குக் கிடைக்கின்றன. மட்பாண்டங்களில் காணப்படும் சித்திர எழுத்துக்கள் இந்த வகையில் குறிப்பிடத்தக்கவை. தொடர்ந்து செய்தித் தொடர்புச் சாதனங்களாக மரம், கல், செம்பு முதலிய பல்வேறு உருவங்கள் திகழ்வதை நாம் காணமுடிகிறது. அதை அடுத்து எண்ணப் பொறிகளாக ஓலைச் சுவடிகள் கட்டிக் காக்கின்றன. காலப் போக்கில் ஏற்பட்ட தொழில் நுட்ப மாற்றத்தின் விளைவாக அச்சியந்திரங்கள் நூல்களைப் பலுகப் பெருகச் செய்கின்றன. நவீன அறிவியல் யுகமான இன்றைய காலகட்டம் கருத்துக்களை உடனுக்குடன் ஒளி, ஒலி வடிவில் உரிய இடத்திற்கு கொண்டு வந்து நிற்கிறது. ஆகவே பல்வேறு துறை சார்ந்த பலதரப்பட்ட வடிவங்களிலுள்ள எண்ணிலடங்கா ஊடகங்களைச் சேகரித்து ஒழுங்குபடுத்தி மக்கள் பொருளாதார அபிவிருத்திக்கும், கல்விக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் உதவும் நூலகங்கள் சென்ற நூற்றாண்டுகளின் ஆரம்பத்தில் செயல்வடிவு கொள்ளத் தொடங்கின.

நூலகம் என்பதை நாம் வாசகசாலை, படிப்பகம், நூல் நிலையம், "Library" என்று பல்வேறு விதமாகக் கூறி வருகின்றோம். Library என்பது "லைபர்" என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து உருவாகியதாகும். "லைபர்" என்பதற்கு நூல்தொகுதி என்று பொருளும் கொள்ளலாம். நூல்களைச் சேகரித்து வைத்திருக்கும் இடம் என்பதனாலேயே 'Library' என்ற பதம் பயன்படுத்தப்பட்டது.

ஆரம்ப காலத்தில் நூல்கள் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும் என்பதே முன்னோரின் முக்கியமான நோக்கமாக இருந்து வந்துள்ளது. இன்று போல இரவல் வழங்கும் சிந்தனை அன்று வலுப் பெற்றிருக்கவில்லை. தேசிய சொத்துக்கள் என்ற வகையில் அவை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் பல இடங்களில் நூல்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. சீன மொழியில் நூலகம் என்பதன் கருத்து "ஒளித்து வைக்கும் இடம்" எனக் கொள்வர். காலப் போக்கில் ஒளித்து வைக்கும் நிலைமாறி பத்திரமாக வைத்திருக்கப்

பாதுகாப்பான இடம் தேடப்பட்டது. அக்காலத்தில் கோயில்கள் பாதுகாப்பான இடமாகக் கருதப்பட்டமையினால் நூல்கள் கோயில்களிலும் மடாலயங்களிலும் வைக்கப்பட்டன.

காலப் போக்கில் அறிவு மூலமாக நூலகங்களின் பணிபாடு உயர் குடியினர்க்கும் மாத்திரம் என்பதிலிருந்து சமூகத்தில் மாற்றம் ஏற்பட்டு கட்டுப்பாடுகள் தளர்ந்தன. காகிதம் கண்டுபிடிக்கப் பட்டதும் அச்சுக் கலையின் துரித வளர்ச்சியும் அதன் மூலம் முன்னென்றுமில்லாத வகையில் நூல்களின் தயாரிப்பு வேகம் பிரதிகளின் எண்ணிக்கை போன்றவை அதிகரித்தமையும். இந்நூலகங்களைப் பயன்படுத்தவும் பலர் முன் வந்தார்கள். சேர்த்து பதுக்கப்பட்டிருந்த நூல் தொகுதிகள் திறந்து வாங்கப்பட்டன. நவீன நூலகவியல் சிந்தனையும் வளர்ச்சியடையத் தொடங்கியது.

சந்தைகளிலும், மக்கள் கூடும் இடங்களிலும் மாத்திரமே தமது கருத்துக்களை சொற் பொழிவாக வழங்கும் வாய்ப்புகளைப் பெற்றிருந்த தத்துவஞானிகள் அச்சுக் கலையின் வளர்ச்சியினால் பெரிதும் பயன் அடைந்தனர். அவர்களது வாய் மொழிகள் யாவும் அச்சில் நூலுருவில் அவர்களது கருத்துக்கள் நீண்ட தூரம் பரந்தளவிலும் மக்களைச் சென்றடையலாயின.

பண்டைக் காலம் தொட்டே இலங்கையில் நூல்கள் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றியுள்ளன. மடாலயங்களில் இருந்த சேர்க்கை யாவும் இன்றளவு பாதுகாப்புடன் பேணி வைக்கப்பட்டு உசாத்துணை நூலகமாகவே காணப்பட்டது. இவை ஆராய்ச்சியாளர்களுக்கும், போதனையாளர்களுக்கும் உதவி வந்தன. இலங்கையின் கல்வி மரபு வரலாற்றில் பெரும் பங்கைச் செயலாற்றிய பௌத்த மதக் கல்வி முறையில் மகா விகாரை, அபயகிரி விகாரை, ஜேதவனாராம விகாரை, போன்ற விகாரைகளில் நூலகம் என்ற அமைப்பு சுவட்டுக் காப்பகமாக செயற்பட்டமைக்கு வரலாற்று ஆதாரங்கள் உண்டு. வட்டகாமினி அபயனின் ஆட்சியில் புத்த மதக் கோட்பாட்டு நூல்கள் எழுதப்பட்ட போது அந் நூல்களில் பிரதிகள் இலங்கையின் கோயில்களிலும் இடம் பெற்றிருந்ததாக அறியப்படுகின்றது.

1505 இல் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் சிங்கள, தமிழ்

இன்று கொழும்பு மாநகர சபையின் கீழ் இயங்கும் இந்நூலகம் தலை சிறந்த நூலகமாக அனைத்துத் தரத்திலும் உள்ள வாசகர்களதும் அறிவை வளர்க்கும் நிலையமாக விளங்குகின்றது. யாழ்ப்பாண நூலக வளர்ச்சியை நாம் நோக்கும் போது முதன் முதலாக ஆரியச் சக்கரவர்த்திகளது காலத்திலேயே சரஸ்வதி மகால் என்ற நூல்நிலையம் ஒன்று இருந்ததாக அறியப்படுகிறது. இதுவே யாழ்ப்பாணத் தமிழ் நாட்டின் நூல் நிலைய வரலாற்றில் நாம் அறிகின்ற முதன் முதல் நூலகம் பற்றிய செய்தியாகவும், இருக்கின்றது. எனினும் அதன் தன்மை பற்றியோ அதன் அமைப்புப் பற்றியோ எவ்வித தகவல்களையும் பெறமுடியாமல் இருக்கின்றது. கையெழுத்துப் பிரதிகள் பல அங்கு சேகரிக்க-பட்டு வைக்கப்பட்டிருந்தன, என்ற குறிப்பு மட்டும் எமக்குக் கிடைக்கின்றது. இதனால் இது யாழ்ப்பாணத்தில் நூலக வளர்ச்சியாகவே முதலாவது படிமுறையையே காட்டுகின்றது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகிய அந்நியர் வருகையால் இலக்கிய வளர்ச்சி தடைப்பட்டது. இவர்கள் கல்வி வளர்ச்சியால் அதிக ஊக்கம் காட்டவில்லை. தமது சமயத்தைப் பரப்புவதற்காக கல்வியை ஒரு கருவியாக்கினர். இதனால் நாட்டில் சமயக் கல்வி வளர்ந்தது. இதனால் மதசம்பந்தமான நூல்களே பேணப்பட்டு வந்தன. இவர்கள் மொழியும் பிறமொழியாக இருந்தமையால் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலிருந்த சரஸ்வதிமகாலைப் போன்றதொரு நூலகத்தின் வளர்ச்சியை இக் காலத்தில் காணமுடிகிறது. நாவலர் வாழ்ந்த காலப் பண்ணையும் சமய இலக்கியங்களும் தமிழ் இலக்கிய வளர்ச்சியை பெருக்குவதற்கு உதவின. மக்களின் கல்வியை ஊக்கம் செய்ய சமய நிறுவனங்கள் இக் காலத்தில் சிறந்த சாதனங்களாக விளங்கின.

நாவலரும் ஏனைய சமய நிறுவனங்களான பப்டிஸ்ட் மிஷன், வெஸ்லியன் மிஷன், அமெரிக்கன் மிஷன் போன்ற கல்வியைப் பரப்பும் எண்ணம் கொண்டு மக்களுக்கு ஏற்ற நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். இந்நூல்களை சேகரித்து பாதுகாத்து அவரும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கலாம். 1816ல் அமெரிக்கன் மிஷனரிமார் முதன்முதலாக யாழ்ப்பாணத்திற்கு வந்து கல்வியை பரப்பும் நோக்குடன் நெடுந்தீவு, சரவணை, வேலணையில் பாடசாலைகளை நிறுவினர். மத போதனைகளை ஊழியர்கள் மூலம் செய்தனர். மதம் சம்பந்தமான நூல்கள் பிற மொழியானவாகவே அவை தேவாலயங்களில் பாதுகாக்கப்பட்டன. தேவாலயங்களே இக்காலத்தில் நூலக-ங்களாக விளங்கின. 1841ல் பத்திரிகைத் துறை என்னும் புதிய துறையின் வளர்ச்-சியால் ஏற்பட்ட பெரிய மாற்றங்களால் உதய தாரகை என்னும் பத்திரிகையும்.

இலக்கியங்களில் ஆர்வத்தைக் காட்டினர். ரோமன் கத்தோலிக்க மிஷனரிமார் அவர்களின் தேவைக்கேற்ப சமய போதனை நூல்களை எழுதி வெளியிட்டனர். 1658ல் இலங்கை வந்த ஒல்லாந்தர் கொழும்பு, காலி, யாழ் கோட்டைகளில் தம்பாதிமாரை வேலைக்கு அமர்த்தி சுதேச மொழி பாவனைக்கு வைத்திட்டனர். 1736ம் ஆண்டு ஒல்லாந்த அரசினால் அச்சுக்கூடம் அமைக்கப்பட்டு நூல்கள் வெளியிடப்பட்டன. 1815ல் இலங்கையைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் தமது தேவைகளை வெளியிடவே அச்சுக் கூடத்தைக் கட்டி நிறுவினர்.

இலங்கையை ஆண்ட அரசர்கள் தங்கள் நிர்வாகப் பதிவேடுகளை பண்டைக் காலத்திலிருந்தே பாதுகாத்து வந்தனர். அதே போல் இலங்கை வந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர்களும் காணி சொத்து பற்று, படைகளைப் பதிவு, வியாபாரங்களது குறிப்புக்கள் என்பவற்றைப் பாதுகாத்து வந்தனர். 1847ல் இருந்து அரசாங்க சுவடிச் சாலை தனிப்பட்ட சுதந்திரமான திணைக்களமாக அமைக்கப்பட்டு வரலாற்றுக் கையெழுத்து படிகள், தமிழன் அரசாங்க பதிவேட்டாளர் அலுவலகம், நூல்கள், புதினப் பத்திரிகைகள், காரியாலயம், தேசிய நூல் அலுவலகம் என்பன நிர்வாக அமைச்சர் சபையின் கீழ் கொண்டுவரப்பட்டது. புராதன ஆவணங்களை பாதுகாத்து வைத்து வெளியிடுவது காப்பாளரது கடமையாக இருந்தது. உள்நாட்டு, வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களின் சுதேச இலக்கிய அறிவும் 1870ல் அரசாங்க கீழைத்தேச நூலகம் அமைக்க காரணமாயது. 1875ல் கொழும்பு நூதனசாலை நூலகம் ஆரம்பிக்கப்பட்டது. 1845ம் இருந்து செயற்பட்டு வந்த றோயல் ஆசிய சங்கத்தின் சேர்க்கையும் கொழும்பு நூதனசாலை நூலகத்துடன் சேர்க்கப்பட்டு 1877ம் ஆண்டு June மாதத்தில் இருந்து பொது மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டன. இன்று இந்நூலகம் இலங்கை வரலாறு தொல்லியல் கீழைத்தேச இலக்கியங்கள், மானிடவியல், தாவரவியல் சம்பந்த-மான மிக முக்கிய ஆராய்ச்சிக்குரிய நூல்களை தன்னகத்தே கொண்டு கலா அபிவிருத்திக்கும் நாட்டு முன்னேற்றத்திற்கும் முக்கிய பணியாற்றி வருகிறது.

1830ல் ஆரம்பிக்கப்பட்ட சந்தா செலுத்தும் நூலகங்களான கொழும்பு நூலகம், புறக்கோட்டை நூலகம், முதலாம் உலக மகாயுத்தத்தின் பின் நிதி நிறுத்தப்பட்டமையால் இரண்டும் இணைந்து கொழும்பு பொதுசன நூலகமாக 1925ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

1889ல் இந்து சாதனம் என்னும் பத்திரிகையும் வெளிவந்தன. இவை சமயக் கருத்துக்களையும் பொது விடயங்களையும் பிரசுரித்தன. இவற்றைப் பொதுமக்கள் படிப்பதற்காக புத்தகசாலைகள் DR படிப்பறைகள் அமைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் வட்டுக் கோட்டை செமினரியால் ஸ்தாபிக்கப்பட்ட கல்லூரியால் 1870ம் ஆண்டில் இத்தகைய நூல் நிலைய மொன்று நிறுவப்பட்டது. 1895ம் ஆண்டிலும் அதன் பின்னரும் நூலக வளர்ச்சியில் இன்னுமொரு வளர்ச்சியை காணலாம். பாடசாலைகளின் பெருக்கத்தாலும், கல்வித் துறையால் ஏற்பட்ட வளர்ச்சியா-லும் மாணவர்கள் தம் அறிவை பெருக்குவதற்கு வாசிப்பு பழக்கத்தை மேற்கொள்ளத் தொடங்கினர். ஆகவே விடயங்களை அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன் நூல்களை நாடிச் செல்லும் நிலை ஏற்பட்டது. இதனால் பாடசாலைகளிலே நூலகங்கள் வரத் தொடங்கின. 1930ல் ஆண்டு கலாநிலையம் ஒரு வாசிப்பு நிலையத்தை 1135 நூல்களுடன் ஆரம்பித்தது.

ஒவ்வோர் ஆண்டிலும் புது நூல்கள் இங்கு சேர்க்கப்பட்டன. காலப் போக்கில் நூல் நிலையங்களின் இடப்பரப்பும் அகலவேண்டிய தேவை ஏற்பட்டது. நூலகங்கள் தனிப்பட்ட கட்டிடங்களாகச் செயற்படத் தொடங்க நூல் நிலையங்களுக்கு பொறுப்பாளராக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு வேதனமும் வழங்கப்பட்டன. மக்களுக்கு இலவசமாக நூல்களை எடுத்துச் செல்லக்கூடிய நிலையங்க-ளாகவும் இவை மாறின. இதனைத் தொடர்ந்து இவை பட்டினசபைகளின் பொறுப்பில் செயற்படத் தொடங்கின. இவ்வாறே தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள பொதுசன நூலகம் 1934ம் ஆண்டு ஆரம்பமாகியது.

1934ம் ஆண்டு ஆனி மாதம் ஒன்பதாம் திகதி யாழ்ப்பாணத்-தில் கலாநிதி ஐசாக் தம்பையா அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டு ஒரு பெட்டியில் ஆரம்பித்து ஒரு சிறு கடையில் சிறிதாக வளர்ச்சியடைந்து இன்னொரு கடையில் நூல்கள் பலத்தைப் பெற்று சாத்தியமடைந்து ஒரு வீட்டின் மாடியில் நூலகப் பகுதிகள் சிலவற்றை அமைத்து நிரந்தரமான ஒரு நூலகமாக ஒரு அழகிய மாடிக் கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியதே யாழ்ப்பாண பொது நூலகமாகும். யாழ்ப்பாண மாவட்ட மக்களின் வரலாற்றில் இப் பொது நூலகம் ஒரு உன்னதமான இடத்தை பல வழிகளில் பெற்றிருக்கிறது. 1834ம் ஆண்டில் சுமார் 800 நூல்களை கொண்ட ஒரு சிறிய நூலகமாக உருப்பெற்று காலப்போக்கில் வளர்ந்து சுமார் 100,000 நூல்களையும் 12600 அங்கத்தவரையும் கொண்ட தெற்காசியாவிலே சிறந்த நூலகமாக விளங்கியது/

இதன் வளர்ச்சி திரு க.சு. செல்லப்பா உயர் நீதிமன்ற நீதிபதி, வைத்திய கலாநிதி தம்பையா, திரு கி. பொன்னம்பலம், வைத்திய கலாநிதி சுப்பிரமணியம், வணபிதா லோரன்ஸ், திருமதி ரூபாபதி, திரு அ.கி. துரையப்பா, திரு எஸ். ஆர். ரவீந்திரநாதன், கட்டடக்கலை நிபுணர் திரு K.S நரசிம்மன் போன்ற உயர்ந்தோர் இவர்களின் உழைப்பினால் உருவானதாகும். இப்போது நூலகம் பெறுவதற்கு அரிதான பல சிறந்த நூல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது.

ஆறுமுக நாவலர், கலாநிதி ஆனந்தக்குமாரசாமி, முதலிய பல தமிழ் அறிஞர்களின் படைப்புகள் மாத்திரமின்றி உலகில் வேறெங்கும் பெறமுடியாத கையெழுத்துப் பிரதிகளும் இடம் பெற்றிருந்தன. அறிவுத் துறைகள் அனைத்திலும் நூல்களைக் கொண்டதாக யாழ்ப்பாண மக்களுக்கு மாத்திரமின்றி இலங்கை முழுவதும் வாழும் தமிழ் மக்களுக்கும் உலகத் தமிழ் மக்களுக்கும் அறிவு வளர்ச்சிக்கு ஒரு களஞ்சியமாக இது விளங்கியது.

இப்பொது நூலகத்தின் ஆரம்பமானது "நூற்றவர் கழகம்" என்னும் பெயரோடு அச்சுவேலியைச் சேர்ந்த சட்டத்தரணி க.மு. செல்லப்பா என்பவரால் கந்தர்மடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இவர் இளைஞர்களுக்கு வாசிக்கும் பழக்கத்தையும் வழங்கியதோடு இலங்கையில் ஆரம்ப காலத்தில் தமது கல்வியறிவை வாய்மொழியாக கேட்டறிந்தே வளர்த்தார்கள். முன்பு புத்ததாசா என்ற அரசனால் தான் அரச வாசிப்பாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் பிறர்களுக்கு நூல் வாசித்து அறிவை புகட்டினார்கள். இன்றும் கூட எமது மலை நாட்டில் இப்பழக்கம் உண்டு. காரணம்:- அதிக நூல்கள் அப்போது இருக்கவில்லை. புத்ததாசா இப்படியான அறிஞர்களையே கிராமங்கள் தோறும் அனுப்பி மக்களுக்கு கல்வி புகட்டி அறிவை வளர்த்தான்.

ஐரோப்பிய தொழிற்புரட்சியால் மேலை நாட்டில் 19ம் நூற்றாண்டில் நகரங்கள், மாநகரங்கள், வர்த்தக நிறுவனங்கள் வளர்ச்சியடைந்தன. அவற்றுக்கு நூலகம் தேவைப்பட்டது. வர்த்தகம், கைத்தொழில் வளர்ச்சியடைந்ததால் நூலகத்தின் அவசியம் உணரப்பட்டது. இதன்பின் பல்கலைக்கழகங்கள் பெருகின. தேசிய காலத்தில் இவற்றின் பெருக்கத்தால் வாசிப்பு சாதனங்கள் பெருகின. இவை வைப்பதற்கு இடம் தேவைப்பட்டது. இதனை பூர்த்தி செய்தனர். கட்டடம் திட்டமிடப்படவில்லை. உதாரணம்:- பிரித்தானியர்கள் கொழும்பு பொது நூலகம் 1813ல் இருந்த கொழும்பு நூலகத்தையும் புறக்கோட்டையில் காணப்பட்ட நூலகத்தையும் இணைத்து 1925ல் தாபிக்கப்பட்டது.

இலங்கையில் முதல் நூலகம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென வற்புறுத்தியவர் பர்மிய அரசன். அவர் பர்மிய மொழியில் எழுதிய திரிபிடகமென்ற நூலை இலங்கை அரசிற்கு பரிசாக கொடுத்த போது இதனை வலியுறுத்தினார். அதுவும் இந்திய அரசினூடாகவே அவர் அதனை கேட்டார். இந்நூலினைத்தும் நெருப்பு அணுகாத பாதுகாப்பான கட்டடங்களில் வைக்கப்பட வேண்டுமென கேட்டுக் கொண்டார். இலங்கை அரசு இப்படியான கட்டடத்தை அக்காலத்தில் கொண்டிராமையால் அதனைக் கொடுவதற்குப் முடியாத நிலையிலிருந்து இதனை உணர்ந்த அரசன் கட்டடம் கட்டுவதற்கான நிதியை கொடுத்து உதவமுன் வந்தான். இதன் இலங்கை அரசு ஏற்றபோது அதற்கான நூல்களையும் பர்மிய அரசனே கொடுத்துதவினான். இவ்வாறாகவே நவீன நூலகம் இலங்கையில் ஆரம்பித்தது எனலாம்.

தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் பொதுவான நூலகம். [illegible], [illegible], செல்வோரையும் பங்களிப்புச் செய்யுமாறு அழைத்தார். 1934ல் இலவச தமிழ் நூலக சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு ஏற்ப ஆஸ்பத்திரி வீதியில் மின்சார நிலையத்திற்கு தெற்கே வருடம் 300/= ரூபா வாடகையில் அறை ஒன்றில் 844 நூல்களுடனும் 30 பருவ வெளியீடுகளுடனும் ஒரு சிறிய பொது நூலகம் ஆரம்பிக்கப்பட்டது. நிதி வசதியின்றி சிறந்த சேவையை செய்ய முடியாதிருந்த இந்நூலகத்தை நகரசபை பொறுப்பேற்று நடத்துவதற்கு முன்வந்தது. 1936ல் இந்நூலகமே வாடி வீட்டுக்கு தெற்கே உள்ள வைத்தியசாலைச் சாலை சந்தை கட்டிடத்தின் அருகேயுள்ள மேல்மாடிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டு இயங்கி வந்தது. நூல்கள் வேறாகவும், சஞ்சிகைகள், பத்திரிகைகள் வேறாகவும் வெவ்வேறு இடங்களில் வைக்கப்பட்டு இருந்தன. வாசகர் நூலகத்தில் இருந்து நூல்களை வாசிப்பதோடு தாம் விரும்பிய இரு நூல்களை இரவல் எடுத்துப் போகும் முறையும் நடைமுறைக்கு வந்தது. ஆனால் பெருகிவரும் வாசகர்களின் தேவைகளை ஈடுசெய்ய இந்நூலக அமைவிடம் போதுமானதாக அமையவில்லை. சுதந்திர இலங்கையில் யாழ்ப்பாண நகரம் மாநகரசபையானதால் பரிபாலனத்துக்கு தொடங்கிய வேளையில் நவீனதொரு நூலகம் தனியாக அமைக்கப்பட வேண்டும். இது யாழ்ப்பாணம் இலங்கை என்பனவோடு அமையாது. தென்கிழக்காசிய நாடுகள் புகழும் வண்ணம் அமைதல் வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கியது. இதற்கான நிதியை திரட்டுவதில் யாழ்ப்பாண மக்கள் பூரண ஆதரவு காட்டியது.

வண. லோங் அடிகளாரது முயற்சியின் பேரில் நூலகத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த எஸ்.ஆர். ரங்கநாதன் அவர்கள் நூலகத்தின் அமைப்பிற்கான திட்டங்களை வகுத்துக் கொடுக்க சென்னை அரசின் கட்டிடக்கலை நிபுணர் திரு K.S நரசிம்மன். வரைபடங்களை வரைந்து உதவினார். 1958ல் முதன்முதலாக இந்நூலகம் யாழ்ப்பாண பொது நூலகம் என்ற பெயரைப் பெற்று 1959ல் முதற் கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. நூலகத்தின் மேற்தளம் 1967ம் ஆண்டிலும் சிறுவர் பகுதி, அரங்கு என்பன இதற்குப் பின்னரும் பூர்த்தி செய்யப்பட்டன.

தெ. மேரி தேவமலர்
A/L (2016)

# தமிழின் சிறப்பு

தங்கத் தமிழும் தாய் மண்ணும்
தரத்தால் என்றும் சிறந்தனவே.
எண்ணற்ற மொழி எழுந்த வரினும்
கண் ஒத்த மொழி தமிழ் மொழியே.

தாயின் பெருமையைத் தரத்தினால் பெறுவர்
தமிழின் பெருமையை இனிமையால் பெறுவர்.
எங்கும் தமிழ் எதிலும் தமிழ்
எம் இதயமே என்றும் மகிழ்.

பாவலரும் நாவலரும் பண்புடை
காவலரும் கண் சிமிட்டும்
கருத்தின் நிறைவே தமிழ்
காலத்தின் சிறப்பே செகழ்.

அன்னைத்தாய்ச் சொல்லைமற்று
அழகாய்ப் பொருள் ஏற்றி
அருமை இனத்தின்
அழியாச் செல்வம் தமிழ்.

புதுமைத் தமிழே பூரிப்போடு

வினைப் பலனையால் வீரியம் பேசும்
கலை அமைப்பை வளமாக்த் தொண்டு
கலம் வறுமையான் வளமாக இன்று.

பசும் தமிழுக்குப் - பரணிபாடு
பல்லக்கில் ஏற்றிப் பாமாலை சூட்டு
மொழியது அழிந்தால் முழுவதும் அழியும்
மேன்மையாய் நிமிர்ந்தால் மறு செழும்பாகும்.

தலைவனாய் நின்று தமிழை வளர்ப்போர்
மண்ணில் விளையும் நறுப் பூக்களே.
மன்னுயர் போற்றும் மங்காத தமிழே
மனுக்குலம் வாழ மாண்புகழ் சொல்வாய்.

தொன்மை நீட்டும் இன்பத் தமிழே
இனி எம்மவன் வாழ்வு உயர்வன் புகழே
வல்ல மொழியால் வளர்த்தலை பெறுவாய்
வாழிய தமிழே வாழிய நீயே.

ஆக்கம்
க. இன்துஜா
A/L [2016].

# அனைவருக்கும் கல்வி

'அனைவருக்கும் கல்வி' என்ற கோஷம் உலக நாடுகள் எங்கும் ஒலிக்கப்படுகிறது. அரசாங்கங்கள் இன்றியமையாக் கடமைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு நாடும் தனது வருமானத்தில் பெரும் பகுதியை கல்விக்காகச் செலவிடுகின்றது. இதனால் இதன் பயன்பாடு பூரணத்துவமுள்ளதாக அமைகின்றதா? என்பது சிந்தனைக்குரிய விடயமாகவே இருக்கின்றது.

மனித சமுதாயம் பலவகையான மக்கட் கூட்டத்தை கொண்டுள்ளது. படித்தவர், பாமரர், செல்வந்தர்கள், ஏழைகள், நல்லவர், தீயவர் எனப் பல்வேறு பாகுபாடுகள் நிலவுகின்றன. சமுதாயத்தில் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் இருக்க வேண்டுமா? இவை எல்லாம் தேவையற்றவை? என்றால் இல்லையென்றே கூறுவர். எனவே இதுபற்றி நாம் நன்கு சிந்திக்க வேண்டும். மனிதர்களுக்கும் மற்றைய பிராணிகளுக்கும் உள்ள வேறுபாடு பகுத்தறிவு ஆகும். பகுத்தறிவே மனிதனை உன்னத நிலைக்கு கொண்டுவர உதவியுள்ளது. இதன் மூலமே மனிதன் மொழிகளை உருவாக்கவும் அதனால் நீதியால் புதியன பல உருவாக்கவும், புதிய உண்மைகளை கண்டுபிடிக்கவும் முடிந்தது. காலத்தோடும் கண்டறிந்த உண்மைகளை தத்தம் மொழிகளில் பதிந்து வைத்துப் பயன்படுத்தியும் முன்னேற்றம் கண்டுள்ளனர். நாம் அடைந்த முன்னேற்றத்தை நிலைநாட்டவும் கல்வியே மனித சமுதாயத்திற்கு தேவையான உன்னத வழியாக கல்வியே திகழ்கின்றது. கல்வியின் மூலமே ஒரு சமுதாயத்தின் பண்பாடும் உடைமையைக் கருத்துக்களும் அழிந்தொழியாது பாதுகாக்க முடியும்.

நாம் வாழும் சமுதாயத்தை ஓர் உடலாக உருவகப்போமாயின் அந்த உடலில் உள்ள எந்த உறுப்பையும் நாம் இழந்து வாழ என நினைத்து விடமுடியாது. ஓர் உறுப்பிற்கு ஊறு நேர்ந்தால் அது உடலின் இயக்கத்திற்கே பாதிப்பை ஏற்படுத்தும். இதே போன்று தான் கல்வி என்பது ஒரு சமுதாயத்தின் உயர்மேன்மையைத்தருகின்றது. சமுதாய உறுப்பினர் யாவரும் கல்வி தன் அறிவினைச் செலுத்துகின்றது. அதற்குப் பாதகம் விளைவித்தால் சமுதாயமே பெரும் பாதிப்பை அடையும்.

கல்வி என்பது நம் கண் போன்றது 'கல்விக்கண் இல்லையேல் நாம் கண்ணிருந்தும் குருடர்களாகவே கருதப்படுவோம்' எனவே நம் அனைவருக்கும் கல்வி அளிப்பதன் மூலம் சமுதாயம் ஒரு படித்த சமுதாயமாகத் திகழ முடியும்.

'விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர்' என்பது வள்ளுவர் வாக்கு. மனிதன் விலங்காக வாழக்கூடாது. அவன் மனிதனாக மனிதப் பண்பாளனாக வாழ வேண்டும். அதற்குக் கல்வியே அச்சாணி. ஒரு சமுதாயத்தில் ஒரு பகுதியினர் கல்வியறிவு படைத்த மனிதர்களாகவும் மற்றைய பகுதியினர் கல்வியறிவு அற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வாறு கல்வியறிவு அற்ற மனிதர்களாக வாழ நேர்ந்தால் அந்தச் சமுதாயம் சீர்பெறவும் முன்னேறவும் முடியாது. சமுதா-யத்திற்கும் அது பெரும் இழுக்காகும்.

கல்வியற் சிறந்த முத்தாய்ப் பெண்மணிகளாக ஒளவையார், காரைக்கால் அம்மையார் போன்றோர் திகழ்ந்தனர். இவ்வுண்மையை நன்குணர்ந்தமையால்தான். ஒவ்வொர் நாட்டிலும்

தன் குடிமக்களுக்கு கல்வியறிவைப் பெறும் உரிமைக் கொண்டு செயற்பட்டு வருகிறது. ஒரு குறிப்பிட்ட வயது வரை கட்டாயக்கல்வி புகட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இதனால் ஏழை எளியோரும் வாய்ப்பை பயன்படுத்தாது போர், வறுமை, அறியாமை, சோம்பல் காரணமாக சிறார் பள்ளிகளில் கல்வியில் கவனம் செலுத்தாது இருக்கின்றனர். இதனால் கிராமப்புற பகுதிகளான மாணவர்கள் பலர் கல்வி பெறும் வாய்ப்பை இழக்கின்றனர். வீட்டு வேலைகளுக்கும், விவசாய நிலங்களுக்கும், உணவகங்களுக்கும் செல்லும் மாணவர்கள் கல்வியின் பெருமையை அறியாது பின்னாளில் வருந்த வேண்டிய நிலைக்குள்ளாகின்றனர். பெற்றோர்களின் நிலை அறிந்து உதவுகின்றனர். படிக்கும் காலம் 'பொற்காலம்' என்பர். அக்காலத்தை இழந்து வரும் மாணவர்கள் தன்னை இழந்தவர்களாகின்றனர். இது பெரும் கொடுமை. இக்கொடுமை ஒழிய வேண்டுமாயின் அனைவருக்கும் கல்வி என்னும் அறிவைப் புகட்ட வேண்டும்.

'எளிமையால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால் இத்தரையே எல்லோரும் நாணிடவும்' என்றார். பாவேந்தர் பாரதிதாசனார். இத்தகைய எல்லோருக்கும் கல்வி புகட்ட ஏற்றன யாவும் செய்யப்பட வேண்டும். மனித சமுதாயத்தை நிலவும் ஏற்றத்தாழ்வுகளைப் போக்கி எல்லோரும் ஓர் இனம் என்ற உயர்ந்த நோக்கோடு சமத்துவமாகச் சேர்ந்தும் வாழ்வதற்குரிய வழியினைக் காட்ட வல்லது கல்வி ஒன்றாகும். எல்லோரும் சமத்துவமாக இன்பம் பெற்று வாழ வேண்டுமாயின் அனைவருக்கும் உரிய கல்வி அளிக்கப்படல் அவசியமாகும்.

அனைவருக்கும் கல்வி என்றால் இம்மக்கள் அனைவருக்கும் எழுத வாசிக்கத் தெரிந்தால் போதும் என நாம் நினைக்கலாகாது. ஒருவர் தான் பெற்றுக் கொண்ட கல்வியால் தனக்கும் தான் வாழும் சமுதாயத்திற்கும் பயன்படும் அளவிற்கு அவரது கல்வி அமைதல் வேண்டும். எல்லோரும் பொறியியலாளர், மருத்துவர், பேராசிரியர் என ஆக வேண்டும் என எதிர்பார்ப்பதும் தவறு. ஒருவர் தம் விருப்பத்திற்கேற்பத் தொழிற்றுறைக் கல்வியையோ, தொழில்நுட்பக் கல்வியையோ, திறன்கலைக்கல்வியையோ, பெறும் வாய்ப்பினை நல்க வேண்டும். இத்தகைய வாய்ப்பும் வசதியும் கிட்டும் போது தான் 'அனைவருக்கும் கல்வி' என்ற சொற்றொடர் பொருளுடையதாக அமையும்.

இன்று இத்தகைய பொருளுடையதான கல்வியைப் பெறுவதற்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் போடப்படுகின்றன. இனம், மதம், சாதி வேறுபாடுகள் இருக்கின்றன. கிராமப்புற மாணவர்க்கும் நகர்ப்புற மாணவர்க்கும் இடையே கல்வி வசதி வாய்ப்புகளில் பாகுபாடுகள் காணப்படுகின்றன. பணம் படைத்தோர் பிள்ளைகள் அனுபவிக்கும் வாய்ப்பு வசதிகள் ஏழை மாணவர்களுக்குக் கிட்டுவதில்லை.

இந்நிலை மாற வேண்டும். எல்லா மாணவர்களுக்கும் எல்லா வசதிகளும் கிட்ட வேண்டும். இத்தகைய ஒரு சூழ்நிலையின் பின் தான் 'அனைவருக்கும் கல்வி' என்னும் சொற்றொடர் அர்த்தம் உள்ளதாக அமையும் என்பது உறுதி

தே. அன்றனி அனுஷா
(AD17)
COMM

# வாசிப்பின் அவசியம்

கி.பி பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்சிஸ் பேகன் என்ற தத்துவமேதை அற்புதமான இரண்டு வாசகங்களை முன்வைத்தார் "வாசிப்பு மனிதனை முழுமையாக்கும்", அறிவே ஆற்றல் என்பனவே அவையாகும். மனித வாழ்க்கையின் முழுமையைத் தீர்மானிக்கின்ற வாசிப்பு. அறிவை ஆற்றல் மிக்க சக்தியாக உருத்திரட்டி உலகின் சவால்களை எதிர் கொள்ளும் திறனைய மெருகு ஊட்டுகின்றது.

இன்றைய உலகு இயந்திரங்களாலும் நவீன தொழில் நுட்பச் சாதனங்களாலும். உருவாக்கப்பட்ட பெருவலையாகச் சுழல்கின்றது. எங்கும் எதிலும் அறிவியலின் அடர்த்தியே சூழ்ந்துள்ளது பார்க்குமிடமெல்லாம் அறிவுசார் வெளிப்பாடுகளே நம்மை நீட்டி நிற்கின்றன. இந்த நிலையில் உலகோடு ஒட்டி ஓடுவதற்கு அறிவு சார் சிந்தனை அவசியம் இத்தகைய அறிவுசார் சிந்தனையை வளர்ப்பதற்குப் பரந்துபட்ட வாசிப்புத் திறன் முக்கியமான துணை ஆகின்றது தன்னைத்தானே அறிந்து கொள்வதற்கும் தன் பலம் மற்றும் பலவீனங்களை எடை போடுவதற்கும் ஏற்ற ஆற்றலை வாசிப்பே வசப்படுத்துகின்றது.

இருப்பினும் இளைய தலை முறையின் ஆர்வம் இன்றைக்கு வாசிப்பின் மீது ஈடுபாடாயில்லை. தொழில் நுட்ப சாதனங்கள் ஊடகப்பரப்பில் உருகுவிப் புதிய புதிய கண்டுபிடிப்புக்கள் மூலம் இளைய தலைமுறையினரை ஆச்சரியப்படுத்திக் கொண்டிருக்கின்றன. புதிய புதிய தொடர்பாடல் சாதனங்கள் மூலம் அவர்களுடைய கவனத்தைத் தன்பால் ஈர்த்து திருப்புகின்றன. அதனால் இன்று இளைய தலை முறையினரின் சிந்தனையோட்டங்களும் ஆர்வமும் தகவல் தொடர்பாடல் சாதனங்கள் மற்றும் பிற பொழுது போக்குச் சாதனங்களை சுற்றியே

வலம் வந்து கொண்டிருக்கின்றன. தொலைக்காட்சி
கணினி செல்லிடப்பேசிகள் இணையம் முறையான
பழக்கத்தைத் தடை செய்கின்றன தாங்களாகத் தொட்டு
உடம்பாராத பிள்ளைகள் பலரை இன்று காண்கின்றோம்
நாவல் என்றால் என்பது பற்றிய அறிவோ அக்கறை
-யோ இல்லாத பலரைப் பார்க்கின்றோம். வாசிப்பை
ஒரு அனுபவமாக செயற்பாடாகவும் தொடரக்
கூடியதாகவும் எடுத்துக் கொள்ளுகின்ற சமூகமான
மனோபாவம் இளைஞர் சிறுவர்களிடம் குறைந்து
விட்டது. நாங்களே வாசிப்பைத் தவிர்த்துக்
கணினியோடு மல்லுக்கட்டுவதையே இன்றைய இளைஞர்க
மேலும் பெரும்பாலானோர்கள் கண்ணுக்கு ஊடாக
இணையத்தில் வரும் சுருக்கமான கட்டுரைகளை
வாசிப்பதோடு தமது வாசிப்புப் பழக்கத்தை மட்டுப்படுத்திக்
கொள்கின்றார்கள் வருத்தத்திற்குரிய உண்மை என்ன
வென்றால் பெற்றோர் மற்றும் ஆசிரியர் கூட
இந்தப் பழக்கத்தைத் தொடருகின்றனர்.

முதலில் வாசிப்பின்
முக்கியத்துவத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்
வாசிப்பு என்பது மன ஒருமைப் பாட்டுடன் கண்கள்
என்ற புலன் வழியாக ஒரு படைப்பாளியின்
எண்ணங்களையும் உணர்வுகளையும் கருத்துக்கள்
பற்பலவாக இனங்காணுதல் அறிதல், விளங்கிக்
கொள்ளல் சிந்தனைக் கேற்றாக்கி நினைவில்
நிறுத்துதல் என்ற செயற்பாட்டுத் தொகுதி ஆகும்.
வாசிப்பு என்பது வெறுமனே எழுத்து கூட்டங்களாக
உள்ள வாக்கியங்களை வாசித்து விட்டுச் செல்வதல்ல
அதற்கும் மேலாக அப் பதங்களையும்
சொற்களையும் வாக்கியங்களையும் ஊடறுத்து
உறைந்துள்ள அவற்றின் எண்ணப் பாங்கை
உள்வாங்கிக் கொள்ளும் பக்குவமுள்ள ஆழமான
தேடல் வழியாக வாசிப்பைக் கொள்ள வேண்டும்

வாசிப்பினால் ஏற்படும் நன்மைகளை நாம் உணர்ந்து கொண்டால்தான் வாசிப்பின் அவசியமும் உணரப்படும். வாசிப்பினால் நடைமுறை உலகில் நடந்து கொண்டிருக்கின்ற விடயங்களை அறிந்து கொள்ள முடிகின்றது. அரசியல் பொருளாதார சமூக கலாசார நிலைகளின் போக்கைப் புரிந்து கொள்வதற்கும் வாசிப்பின் வழியே அறிந்து கொள்வதற்கும் நிறைவேறுபவர்கள் உள்ளனர். வாசிப்பின் வழியாக பெறுகின்ற அறிவு பல்வகைப்பட்ட திறன்களைக் கூர்மைப்படுத்த வழிவகுக்கும்.

வாசிப்பினால் ஏற்படுகின்ற முக்கியமான நன்மைகளுள் ஒன்று தேடல் பழக்கத்தைத் தூண்டுதல் ஆகும். பெறுமதிமிக்க கற்றல் செயற்பாடுகளாகவும் மகிழ்வூட்டுகின்ற பொழுது போக்காகவும் மாத்திரம் அல்லாமல் புதியவற்றைத் தேடுகின்ற ஆர்வத்தையும் வாசிப்புப் பழக்கம் வளர்க்கும்.

வாசிப்பினால் மனிதனின் பண்பட்ட குணங்கள் பலவும் பரிமளிப்படுகின்றன. மன்னிப்பு, இரக்கம், மன ஒருமைப்பாடு பொறுமை ஆகிய உணர்வு மிகுந்த மனப்பாங்கு மற்றவர்க்கு விட்டுக் கொடுக்கின்ற மனப்பக்குவம் உதவி புரிகின்ற உன்னத உணர்வு முதலான உயரிய குணங்கள் வாசிப்பின் ஊடாக நம்முள் வளருகின்றன. ஒரு நூலகம் திறக்கப்படுகின்ற பொழுது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன. என்ற கருத்து வாசிப்பின் நல்லமையை உணர்த்துகின்றது. மடமையாக விளங்குகின்றது. பேட்ரண்ட்ரசல் என்பவர் கூறுவது போல வாசிப்பு என்பது நல்ல அனுபவம் அவ் அனுபவத்தின் பெறுபேறு நல்ல சிந்தனைக் கொள்கையும் உன்னதமிக்க ஒன்றையும் மனநிறைவையும் மனதுக்கு அமைதியையும் தருகின்றது.

மொழியாற்றலை விருத்தி செய்வதற்கும் எழுத்தாற்றலை வளர்ப்பதற்கும் எழுத்துப் பிழையின்றி எழுதுவதற்கும் வாசிப்பு பழக்கம் உதவுகின்றது. போட்டி நிறைந்த இன்றைய சூழலில் ஒருவர் தன் அறிவாற்றலை விருத்தி செய்து கொண்டாலன்றி இந்தப் பரபரப்பான உலகத்தில் திடமாகக் காலூன்றி நிற்க முடியாது. இந்தக் குறையைப் போக்குவது தொடர்ச்சியானதும் ஆழமானதுமான வாசிப்பே.

வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து செல்வது மாணவர்களின் சிந்தனைப் போக்கிலும் பெரும் குறைபாடுகளை உண்டுபண்ணி விடுகின்றது. மாணவர்களின் மொழித் தேர்ச்சியில் பெரும் பாதிப்பு ஏற்படுவதற்கும் வாசிப்பின்மை காரணமாக இருக்கின்றது. வாசிப்புப் பழக்கம் இல்லாததால் மாணவர்கள் தாம் சிந்திப்பதை எழுத்தில் கொண்டு வருவதற்கும் முடியாமல் தடுமாறுகின்றனர். அல்லது பிழைகள் மலிய எழுதுகின்றனர். அவர்களுடைய கற்கை மற்றும் பயன்பாட்டுத் திறன்கள் மங்கிப் போகின்றன. ஒரு மாணவன் கற்றலுக்கான நுண்ணறிவுடன் உடையவனாக இருந்தாலும் வாசிப்புத் திறன் அற்றவனாயின் அவனால் திறம்பட செயலாற்ற முடியாத நிலை உருவாகின்றது. முக்கியமாகச் சில பாடங்களில் மாணவர்களின் அடைவு மட்டம் பற்றி ஆராயும் போது அப்பாடங்களில் மாணவர்கள் அடைகின்ற வெற்றி தோல்விகளுக்கும் அவர்களுடைய வாசிப்பு மட்டத்திற்கும் தொடர்பிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

பாடப்புத்தகங்களை வாசிப்பதற்கான ஆர்வத்தை வாசிப்புப் பழக்கமே போஷிக்கின்றது. பாடப்புத்தகங்களுக்கு அப்பால் பல்வேறு துறை சார்ந்த நூல்களை வாசிப்பதனால் வாழ்க்கையின் பல்வேறு செல்நெறிகளையும் அறிந்து கொள்ள முடிகின்றது எடுத்தாளவும்

இதனால் உண்டாகின்றது. வாசிப்பதனால் வாசகத்திறமையும் வளர்த்துக் கொள்ளப்படுவதுடன் பேச்சாற்றலையும் செம்மையுறுகின்றது. பல்வேறு விடயங்களையும் வகைப்படுத்தித் தொகைப்படுத்திப் பேசவைக்கும். வாசிப்பு பழக்கம் அவசியம் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

வாசிப்புக்குரிய சூழலை இளமையில் நாம் இனங்காண வேண்டும் பெற்றோரும் சுற்றுச் சூழலும் வாசிப்பை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எம்மைச் சுற்றி நூல்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. எம்மைச் சுற்றி நூல்கள் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுதல் நூலகம் ஒன்றை வீட்டில் உருவாக்குதல் வாசிப்புப் பழக்கம் உள்ளவர்களோடு நட்புப் பாராட்டுதல் போன்றவற்றின் மூலம் வாசிப்பதற்கேற்ற சூழலை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு நூலை வாசிக்காது போனாலும் அந்த நாள் எனக்குப் பயனற்ற நாளன்று என்ற எண்ணப்பாங்கை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

வாசிப்புக்கேற்ற சிறந்த இடம் நூலகமே. நூலகங்கள் "அறிவுப் பசிபோக்குகளின் கூடாரம்" எனப்படுகின்றது. நூலகம் பற்றிக் கூறுகை ம. சண்முகலிங்கம் பின்வருமாறு கூறுவார்.

கடலைப் போன்றது நூலகம் மணலை விரும்புவோர் மணலை எடுக்கலாம். சிப்பி சங்கு சோகிகளைப் பொறுக்குவோர் அவற்றை பொறுக்கலாம் மீன்பிடிப்போர் மீன்பிடிக்கலாம் காற்று வாங்க விரும்புவோர் காற்று வாங்கலாம். வெறுமனே கரையிலிருந்து கடலைப் பார்த்து மகிழ விரும்புவோர் இரசிக்கலாம். வெவ்வேறான நோக்கமுடைய எவரோ அதனை அவர் நினைந்து பெற்றுக் கொள்ளலாம்.

நூலகங்கள் மாற்றமடைந்தாய் புத்தகக் கண்காட்சிகளும் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டுகின்றன. எங்கு புத்தகக் கண்காட்சி நடைபெற்றாலும் அங்கே சென்று நூல்களைப் பார்வையிடுகின்ற பழக்கமே நாளடைவில் வாசிப்பைத் தோற்றுவிக்கும் அத்துடன் பெற்றோரின் ஊக்குவிப்பும் வாசிப்பதற்கான தூண்டுதலை ஏற்படுத்தும் பிள்ளைகளை நூல்களை வாங்கக் கொடுத்தல் சிறப்பான செயற்பாடுகளால் வாசிக்கும் பழக்கத்தை வளர்க்க லாம்.

இன்று இணையம் வழியான வாசிப்பும் முனைப்புப் பெற்றுள்ளமை அவதானிக்கத்தக்கது. மாற்றங்களையும் புதிய வரவுகளையும் ஏற்றுக் கொள்ளல் என்கின்ற வகையில் இணையம் வழியான மின்னியல் வாசிப்பையும் நாம் எண்மயமாவதால் தவறில்லை உலக வாசிப்பு பயமாகிவிட்ட இன்றைய இணைய வாசிப்பு முறையானது எல்லையான மாறுபட்ட வாசிப்புமுறை நோக்கி நம்மை மாற்றிவிட்ட தன்மையையும் அவதானிக்க முடிகின்றது.

வாசிக்க தெரிந்தோர் எல்லாம் முத்தியமானவரோ? அந்தளவுக்கு அவசியமானது எனவே வாசிப்பது என்பதை அறிவது ஒரு நல்ல நூலை வாசிப்பது நீண்ட நேரம் சாலையில் நல்ல நண்பனுடன் அளவளாவிக் கொண்டு செல்வதற்கு சமம் இந்த வகையில் வாசிப்பு என்பது எம்மை செம்மைப்படுத்துகின்ற உற்ற தோழனாக மிளிர்கின்றது என்பதில் ஐயமில்லை.

பண்பாடு இன்று திசை தெரியாத வேகத்திலும் கட்டுப்பாடுகளில்லாத வரையறைத் தொடு கலக்கமில்லாத பயணத்தில் சென்று கொண்டிருக்கின்றது

ஊடக

கற்றலையியல் மனித மனத்தை பண்படுத்தி
அதை சரியான திசை நோக்கி நெறிப்படுத்த
உதவுகின்ற முழுமையாக வாசிப்பு உதவுகின்றது
வாசிப்பினால் மனிதன் பெரும் ஆற்றல்களை
அவன் வாசிப்பினாலேயே அனுபவ ரீதியாக
அறிந்து கொள்ளமுடியும்.

J. Rajivan
A/L (2016)

# வாசிப்பின் அவசியமும் முக்கியத்துவம்

கி.பி பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்சிஸ் பேகன் என்ற தத்துவமேதை வாசிப்பு பற்றி அற்புதமான இரண்டு வாசகங்களை முன்வைத்துள்ளார். "வாசிப்பு மனிதனை முழுமையாக்கும்", "அறிவே ஆற்றல்" என்பனவையே அவையாகும். மனித வாழ்க்கையின் முழுமையைத் தீர்மானிக்கின்ற வாசிப்பு, அறிவை ஆற்றல் மிக்க சக்தியாக உருத்திரட்டி, உலகின் சவால்களை எதிர்கொள்ளும் திராணியை ஊக்கி ஊட்டுகிறது.

இன்றைய உலகு இயந்திரங்களினாலும், நவீன தொழில்நுட்ப சாதனங்களாலும் உருவாக்கப்பட்ட பெருங்குழியாகச் சுழல்கிறது. எங்கும் எதிலும் அறிவியலின் அடர்த்தியே சூழ்ந்துள்ளது. பார்க்கும் இடமெல்லாம் அறிவு சார் வெளிப்பாடுகளே தலைநீட்டியுள்ளன. இந்த நிலையில் உலகோடு ஒட்டி வாழ்வதற்கு அறிவுசார் சிந்தனை அவசியமாகும். இத்தகைய அறிவுசார் சிந்தனையை வளர்ப்பதற்கு பரந்துபட்ட வாசிப்புத்திறன் முக்கியம்-ஆகின்றது. தன்னைத் தானே அறிந்து கொள்வதற்கும், தன் பலம் மற்றும் பலவீனங்களை எடை போடுவதற்கும் ஏற்ற அறிவை வாசிப்பே எடை போடுகிறது.

இருப்பினும் இளைய தலைமுறையின் ஆர்வம் இன்று வாசிப்பின் மீது விழுவதாயில்லை. தொழில்நுட்ப சாதனங்கள், ஊடகப்பரப்பில் ஊடுருவப்-புதிய புதிய கண்டுபிடிப்புகள் மூலம் இளையதலைமுறை ஆச்சரியப்படுத்திக்-கொண்டிருக்கின்றன. புதிய புதிய தொடர்பாடல் சாதனங்கள் மூலம் அவர்களுடைய கவனத்தை தம்பால் திசைதிருப்புகின்றன. அதனால் இன்று இளையதலைமுறையினரின் சிந்தனையோட்டங்களும் ஆர்வமும் தகவல்-தொடர்பாடல் சாதனங்கள் மற்றும் பிற பொழுதுபோக்குச் சாதனங்களைச் சுற்றியே வலம் வந்து கொண்டிருக்கின்றன. தொலைக்காட்சி, கணினி, செல்லிடத் தொலைபேசிகள், இணையம் முதலான இலத்திரனியற்-சாதனங்கள் இளந்தலைமுறையினரின் வாசிப்புப் பழக்கத்தை தடை-செய்கின்றன. நூல்களைத் தொட்டுக் கூட பார்க்காத பிள்ளைகளை இன்று காண்கின்றோம். நூலகம் என்றால் என்ன என்பது பற்றிய அறிவோ அக்கறையோ இல்லாத பலரைக் காண்கின்றோம். வாசிப்பை ஒரு அலுப்புக்குரிய செயற்பாடாகவும், நேரவீண் இறைச்சலாகவும் எண்ணுக-கொள்கின்ற ஆபத்தான மனோபாவம் இளந்தலைமுறையினரிடம் முளை விட்டுள்ளது. நூல்களை வாசிப்பதைத் தவிர்த்துக் கணினியோடு மல்லுக் கட்டுவதையே இன்றைய இளைஞர்கள் பெரிதும் விரும்புகின்றனர். கணனி ஊடாக இணையத்தில் வரும் சுருக்கமான கட்டுரைகளை வாசிப்பதோடு தமது வாசிப்புப் பழக்கத்தை மட்டுப்படுத்திக் கொள்கின்றனர்

வருந்தத்தக்க உண்மை என்னவென்றால் பெற்றோர் மற்றும் ஆசிரியர் சிலரும் இந்தப் பழக்கத்தைத் தூண்டுவது தான்.

முதலில் வாசிப்பின் முக்கியத்துவத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். 'வாசிப்பு என்பது மன ஒருமைப்பாட்டுடன் கண்கள் என்ற புலன் வழியாக ஒரு படைப்பாளியின் எண்ணங்களையும், உணர்வுகளையும் எழுத்துக்கள் வழியாக இனம்காணுதல், அறிதல், விளங்கிக் கொள்ளல், சிந்தனைக்குரியதாக்கி நினைவில் நிறுத்துதல் என்ற செயற்பாட்டுத் தொகுதி ஆகும். வாசிப்பு என்பது வெறுமனே எழுத்துக் கூட்டங்களாக உள்ள வாக்கியங்களை வாசித்து விட்டுச் செல்வதல்ல. அதற்கும் மேலாக, அவ் எழுத்துக்களையும் சொற்களையும் வாக்கியங்களையும் ஊடறுத்து அவற்றின் எண்ணப்பாங்கை உள்வாங்கிக் கொள்ளும் வகையிலான ஆழமான தேடல் வழியாகவே வாசிப்பின் பயனைப் பெற்றுக் கொள்ளலாம்.

வாசிப்பினால் ஏற்படும் நன்மைகளை நாம் உணர்ந்து கொண்டால் தான் வாசிப்பின் அவசியமும் உணரப்படும். வாசிப்பினால் நடைமுறை உலகில் நடந்து கொண்டிருக்கின்ற விடயங்களை அறிந்து கொள்ள முடிகிறது. அரசியல், பொருளாதார, சமூக இயங்குநிலைகளின் போக்கை புரிந்து கொள்வதற்கும் வாசிப்பின் வழியாகப் பெறுகின்ற அறிவிற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. வாசிப்பின் வழியாகப் பெறுகின்ற அறிவு பல்வேறுபட்ட சிந்தனை கூறுகளிற்கு வழிவகுக்கும். வாசிப்பினால் வருகின்ற முக்கியமான நன்மைகளில் ஒன்று தேடல் பழக்கத்தைத் தூண்டுதல் ஆகும். வெறுமனே கற்றல், செயற்பாடுகளாகவும் மாத்திரம் அமையாமல் புதியனவற்றைத் தேடுகின்ற ஆர்வத்தையும் வாசிப்புப் பழக்கம் வளர்க்கும்.

வாசிப்பினால் எமக்குள் பண்பட்ட குணங்கள் யாவும் பதியமிடப்படுகின்றன. பணிவு, ஒழுக்கம், மனஒருமைப்பாடு, பொறுமை, தியாக உணர்வு, பரந்த மனப்பாங்கு, பிறருக்கு விட்டுக் கொடுக்கின்ற மனப்பாங்கு, உதவிபுரிகின்ற உன்னத உணர்வு முதலான உயரிய குணங்கள் வாசிப்பின் ஊடாக நமக்குள் சுவறுகின்றன. "ஒரு நூலகம் திறக்கப்படுகின்ற பொழுது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன" என்ற கருத்து வாசிப்பின் வல்லமையை மகுட வாசகமாக விளங்குகின்றது. பேட்ரண்ட் ரஸல் என்பவர் கூறுவது போல வாசிப்பு என்பது நல்ல சுவாசிப்பு. அச் சுவாசித்தலின் பொருட்டு நல்ல சிந்தனைத்

தெளிவையும் உள்ளத்தில் ஒளியையும் உண்டாக்குகிறது. அந்த ஒளி மனத்தையும் மனதுக்கு அமைதியையும் தருகின்றது.

மொழியாற்றலை விருத்தி செய்வதற்கும் எழுத்தாற்றலை வளர்ப்பதற்கும், எழுத்துப் பிழையின்றி எழுதுவதற்கும் வாசிப்புப் பழக்கம் உதவுகின்றது. போட்டி நிறைந்த இன்றைய சூழலில் தன் அறிவாற்றலை விருத்தி செய்து கொண்டாலன்றி இந்த பரபரப்பான உலகத்தில் திடமாகக் காலூன்றி நிற்க முடியாது. இந்தக் குறையைப் போக்குவது தொடர்ச்சியானதும் ஆழமானதுமான வாசிப்பே.

வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து செல்வது மாணவர்களின் சிந்தனைப் போக்கிலும் பெரும் குறைபாடுகளை உண்டுபண்ணி விடுகிறது. வாசிப்பதற்குரிய சூழலை முதலில் நாம் இனம்-காண வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு நூலையாவது வாசிக்காது போனாலும் அந்த நாள் நமக்கு பூரணமான நாளாக அமையாது - என்ற மனப்பாங்கை உருவாக்கிக் கொள்ள வேண்டும். வாசிப்பதற்கு சிறந்த இடமே நூலகம் தான். நூலகங்கள் "அறிவுப் பதிவேடுகளின் அரங்கம்" எனப்படுகிறது. நூலகம் பற்றி குழந்தை ம. சண்முகலிங்கம் பின்வருமாறு கூறுவார். "கடலைப் போன்றது நூலகம். மணலை விரும்புவோர் மணலை எடுக்கலாம், சிப்பி, சங்கு சோகிகளை பொறுக்குவோர் அவற்றைப் பொறுக்கலாம். குளிப்போர் குளிக்கலாம். காற்று வாங்குவோர் காற்று வாங்கலாம். மீன்களைப் பிடிப்போர் அவற்றைப் பிடிக்கலாம். வெறுமனே கடற்கரையில் கடலைப் பார்ப்போர் அவ்வாறு செய்யலாம். ஒவ்வொருவரது நோக்கம் எதுவோ அதனை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

வாசிக்கத் தெரிந்திருப்பது எவ்வளவு முக்கியமானதோ அத்தளவுக்கு அவசியமானது எதை வாசிப்பதென்று பற்றி அறிவதாகும். நல்ல நூல்களை வாசிப்பது நீண்ட நெடிய சாலையில் நல்ல நண்பனுடன் அளவளாவிக் கொண்டு செல்வதற்கு சமம். பண்பாடு இன்று திசைதெரியாத வேகத்திலும் கட்டுப்பாடில்லாத அவசரத்தோடும் இலக்கில்லாத பயணத்தில் சென்று கொண்டிருக்கிறது. இந்நிலையில் மனித மனதைப் பண்படுத்தி அதை சரியான திசை நோக்கி நெறிப்படுத்த உதவுகின்ற கடிவாளமாக வாசிப்பு உதவுகிறது. வாசிப்பினால் மனிதன் பெரும் ஆற்றல்களை அனுபவ பூர்வமாக அறிந்து கொள்ள முடியும்.

# சொல்வளத்தை பெருக்கும் வாசிப்பு

கற்றறிந்தோர் முன் தலைநிமிர்ந்து நிற்கும் நிலையை வாசிப்பு ஏற்படுத்துகின்றது. கற்பித்தலின் மூலம் பெறும் அறிவை விட வாசிப்பதன் மூலம் அறிவோடு சொல்வளமும் விருத்தியடைகிறது. எமது மனதில் தவறான எண்ணங்களை நீக்கி புதிய வழி காட்டலை உருவாக்குகின்றது. வாசிப்பதன் மூலம் ஞாபக சக்தி பெருக வழி ஏற்படுகின்றது. கற்பித்தலின் போதோ அன்றி மேடையில் பேசும் போதோ தங்கு தடையின்றி சரளமாக பேசுவதற்குரிய சொல்வளம் வாசிப்பதன் மூலம் கிடைக்கின்றது. தொலைக்காட்சியை பார்ப்பதன் மூலமோ பேசுவதன் மூலமோ சொல்வளத்தை பெருக்க முடியும் என்ற எண்ணம் தவறு. வாசிப்பதே சொல்வளத்தை கிரகித்து எமது மூளையில் புதிய வைக்கும் கூடுதலான ஆற்றலைப் பெற்றுள்ளது என ஆய்வாளர்கள் அறிந்துள்ளனர்.

சிறுவர் நாம் வாசிக்கும் நூல்களிலிருந்து பல புதிய சொற்களை கிரகித்து கொள்கின்றனர். பத்திரிகைகளில் பல வகையான புதிய சொற்கள் அறிமுகமாகின்றன. சிறுவர் இலக்கியங்களில் பல மனதை மகிழ்விக்கும் சொற்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இவையாவும் நூல்களை பத்திரிகைகளை வாசிக்கும் போதே எம்மை அடைகின்றன.

பல விடயங்களையும் தெரிந்து வைத்திருக்கும்போது எம்மை அறியாமல் எம்மிடம் ஓர் உற்சாகம் பிறக்கின்றது. வாசிப்பு பொழுது போக்கு மட்டுமல்லாமல் பல பொது விடயங்களை அறியும் கலையுமாகும். பொருட்கள் எப்படி உற்பத்தி செய்யப்படுகின்றன? எமக்கு போசாக்கு கிடைக்கும் உணவு வகைகள் சூழலை பாதுகாத்தல் திறமையான விடயங்கள் அரசியல் போன்ற பல பொது விடயங்களை வாசிப்பதன் மூலமே பெற முடியும்.

கல்வி அறிவினிற் சிறந்த பெரியோர்களின் ஞாபகசக்தி எந்த நூலிலிருந்து சிறப்புக்களை எடுத்துக் கூறுதல் பழமொழிகளை சரளமாக உதாரணத்திற்காக சொல்லுதல் இலக்கியம் இப்படி பல. இன்றைய இளைஞர்கள் எந்த நூலையாவது மேற்கோள் காட்டி பேசக்கூடிய வல்லமையுள்ளவர்களாக உள்ளனரா? நம்மிடம் வாசிப்பு பழக்கம் அருகி வருவதே இதற்கெல்லாம் காரணம்.

ஆக்கம் : பு. நிரோசா
A/L (2016)

## இருதலை வாசகம்

பூமிவாசி சொன்னான் புறவுலக வாசியைப் பார்த்து
'வேற்று கிரகவாசி'
நகரவாசி கிராமத்தனைப் பார்த்து சொன்னான்
'நாட்டுப்புற வாசி'
நாட்டுப்புறவாசி மலைக்குடியனைப் பார்த்து சொன்னான்
'காட்டு வாசி'

மனிதனை மனிதன் வாசிப்பு செய்த போதெல்லாம்
தன்னின் அந்நியமாகவே நோக்கினான்
அந்நியம் கொள்தல் அந்நியம் செய்தல்
இதுவே எமது பண்பாடாய் போயிற்று
பிறனில் தன்னை வாசித்தல்
தன்னில் பிறனை வாசித்தலை
மனிதரை அருகாதல் கொணர்ந்து இணை வாசிப்பு
செய்தல் எவ்விடத்தும் இல்லை

இன்றைய அறிவு யுகத்தில் மார்க்சிக் கோட்டில்
வேற்றுகிரகங்கள் என்பது பிழை
எல்லாம் எமது அண்டைய கிரகங்கள் என்றே வாசிப்போம்
நகரம், கிராமம் என்ற எல்லைக் கோடுகள் கரைந்து
இணை பொருளாதார மார்க்சிக் கோட்டில்
ஒரு தாய் மனிதர்களென்றே அறிவோம்
காட்டு வாசி என்ற பழங்குடி மரபினர் தான்
எமது முற்ற பண்பாட்டிற்கு ஊறு செய்யாத
சிறந்த மேம்பட்ட பண்பாட்டு மரபுடையவர்
பார்வையில் நோக்குவோம்
சுற்று புற சூழலும் வாழ்வின் சீரான
சக மனிதர்கள் என்போம்.

சி. சிவாரணி
12

# இளைய தலைமுறை

இளைய தலைமுறையின்
இன்றைய நாகரிகம்
இயல் இசையெலாம் இருப்பது நிஜமே

மாணவ மாணவி மணிகளின்
மானமற்ற சேஷ்டைகள்
மனித நேயமற்ற ஏகாந்த வேடங்கள்
புனிதமற்ற கல்வி கற்றல்

பகிடி வதைகள் பாலியல் கொலைகள்
பண்பில்லா பழக்க வழக்கங்கள்
போதைப் பொருட்கள் பொய்யான நிர்வாணங்கள்

சீருடை வெண்மை தான்
சீர்தூக்கிப் பார்த்தால் கறைந்து போனது
கல்வி மட்டுமல்ல கலாச்சாரமுமே
சிந்திக்க வேண்டியவை - - - -

கணனி கல்விக்கோர்
கலங்கரை விளக்கம்
கண்ணியமாய் கற்றால்
இளம் பருவக் கல்வி
இனிய மென் பறவை போன்று
இதமாக நடந்து கொண்டால்
சீரடைந்து சாந்தி பெறும் - - - -
அமைதி படைத்தால்
இச்சை முட்டி இறந்து விடும்
கீர்த்தி படைத்தால்
தப்பித்து ஓடி விடும் - - -

பள்ளிப் பருவம் பசுமையானவை
இனிய தோழரும்
நினைவுகள் அலை பாயும்
வரம்பெனும் கடிவாளமிட்டு
அடங்கிக்கிடந்தோம் ---

அழகான கல்வியில்
கவனம் செலுத்துங்கள்
நீங்கள் உயர்வடைவதை
யாராலும் தடுக்க முடியாது.

மாணவ சமுதாயமே
எதிர் காலத்தில்
இந் நாட்டை செதுக்கப்போகும்
சிற்பிகளே ---

உலகுக்கு
கோடி நன்மை தருகின்ற
சூரியனை போன்ற
பிரகாசமுடைய உங்கள்
கண்களில்
இருந்து -----

தீயனவெல்லாம் சுட்டுப் பொசுங்கட்டும்
நன்மைகள் நன்றே பிறக்கட்டும்

ம. ஆண்டிவாணி
தரம் :- 13 கலை (2016)
புனித அந்தோனியார்
கல்லூரி.

# பாடசாலைகளில் நூலகங்கள்.

மனித வாழ்க்கையில் நூலகங்களின் முக்கியத்துவம் என்றும் பேசக் கூடிய ஒன்றாக காணப்படுகின்றது. "லைபர்" என்ற இலத்தீன் மொழிச் சொல்லுக்கு "நூல்தொகுதி" என்பது பொருளாகும். இது காலப் போக்கில் மாற்றமடைந்து சீன மொழியில் "ஒளித்து வைத்திருக்கும் "இடம்" எனப் பயன்படுத்தப்பட்டது. இச் சொல் ஆங்கிலத்தில் Library என உச்சரிக்கப்பட்டு உலகம் பூராகவும் பேசப்பட்டு வருகின்றது.

"இன்றைய உலகில் ஒரு மனிதன் காலத்தோடு ஒன்றியவனாக இருக்க வேண்டுமென்றால் அவன் நாளாந்தம் குறைந்தது நான்கு புதினப் பத்திரிகைகளையும் வாராந்தம் இரண்டு வார சஞ்சிகைகளையும் மாதாந்தம் ஒரு மாத வெளியீட்டையும் வாசிக்க வேண்டும்" என்று இலங்கையின் புகழ்மிக்க வான்வெளி டாக்டர் ஆதர் சி கிளாக் கூறினார்.

மறைந்த இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் "உலக அறிவை பெற்றுக் கொள்ளக் கூடிய திறவுகோல்". எனவும் "கல்வியும் நூலகமும் பிரிக்கமுடியாத சகோதரர்கள் போன்றதாகும்" என்று குறிப்பிட்டார்.

கல்வி செயற்பாடுகளில் நூலகம் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. நமது கல்வியின் நோக்கத்தை நிறைவு செய்து கொள்ள நிறையவே வாய்ப்புக்கள் உண்டு.

அதனால் தான் பாடசாலை நூலகங்களை மேம்படுத்தும் பொருட்டு உலகம் முழுதும் ஆண்டு தோறும் ஒக்டோபர் மாதத்தின் நான்காவது திங்கட் கிழமை அன்று உலக பாடசாலை நூலக நாள் கொண்டாடப்பட்டு வருகின்றது. பாடசாலை நூலகத்தின் முக்கியத்துவத்தினை தெளிவடையச் செய்வதற்காக தேசிய பாடசாலை நூலக வாரமும் கொண்டாடப்படுகிறது.

பாடசாலை நூலகங்களே பாடசாலைக் கல்வியின் நிறைவையளிப்பனவாகவும் சிறந்த கற்கை மையங்களாகவும் திகழ்கின்றன. இதன் மூலமே பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு அறிவும் வாரி வழங்கப்படுகின்றது.

பழைய கல்வி முறையான கற்றல் - கற்பித்தல் முறை மாறி தேடிக் கற்றல் கல்விமுறை வந்துள்ளமை இந்த புதிய கல்விச் சீர்திருத்தத்தின் அளப்பரிய பங்காக காணப்படுகின்றது. அதாவது தேடிக் கற்றலுக்கு ஏற்ற வாய்க்காலாகப் பாடசாலை நூலகங்கள் மாற்றம் பெற்றுள்ளன. ஒவ்வொரு மாணவரும் ஆசிரியரையோ மற்றவர்களையோ தங்கி வாழாது தமக்குத் தேவையானதை தாமே தேடிக் கற்பதற்கு நூலகங்கள் துணைபுரிகின்றன.

தற்காலத்தில் சிறுவர்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்துவது தொடர்பாக பல நூல்கள் வெளிவருகின்றன. இந்த வகையில் நூலடிப்படையிலான வேலைத் திட்டங்கள் மூலம் வாசிப்புத்திறனை வளர்த்தெடுக்க முடியும் என புதிய தொரு முறையை உலகம் கண்டு கொண்டுள்ளது. இதன் சிறப்பான முயற்சியாக சிறுவர்களைக் கவரும் மிகத் தெளிவான படங்கள் சிறுகதைகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

மொழியில் வாசித்தல், எழுதுதல், கேட்டல், பேசுதல் ஆகிய நான்கு அடிப்படைத் திறன்களிலும் மாணவர்கள் மேலோங்கி நிற்க காரண கர்த்தாவாகத் திகழ்வது நூலகங்களே என்பது பல நாட்டு ஆய்வின் முடிவாகும். அதுமட்டுமன்றி வாசிப்புத் திறனை மேம்படுத்துவதன் மூலம் பலவித பாடத் தேவைகளையும் மாணவர்கள் நிறைவு செய்து கொள்ளும் ஒரு சேவைக் களமாக இந்நூலகம் திகழ்கின்றது.

வகுப்பறையிலும், விளையாட்டுக்களில் மட்டும் மாணவர்களின் கவனத்தை திசை திருப்புவதை நோக்காக கொள்ளாது பாடசாலை நூலகங்களிலும் ஆற அமர்ந்து நூல்கள், சஞ்சிகைகளை மாணவர் புரட்டிப் படிக்க அதிபர்கள், ஆசிரியர்கள் வழிசமைக்க வேண்டும்.

அத்துடன் நூல்களை வாசிப்பதோடு மட்டுமல்லாது அவற்றை ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் பராமரிக்கும் பழக்கத்தையும் மனப்பாங்கையும் மாணவர்களிடையே உண்டுபண்ண வேண்டும். இதற்காக மனப்பக்குவத்தை வளர்க்கும் நூல்களை மதித்து நடக்கும் பண்புகளை சிறு பராயத்திலேயே வளர்க்கும் நோக்காகவே உலக பாடசாலை நூலக நாள் கொண்டாடுகிறது. இந்த அறிவு பூர்வமான வாரத்தை அர்த்த பூர்வமானதாக அனுஷ்டிப்பதே நூலகத்தின் தேவையாகும்.

பாடசாலையின் நூலக வளர்ச்சியும், வீழ்ச்சியும் அப்பாடசாலை நூலக ஆசிரியரிலேயே தங்கியுள்ளது. அந்த வகையில் ஆசிரிய நூலகர்கள்

இன்றைய பாடசாலைகளில் மிகவும் தேவையானவர்கள் அதனால் தான் பாடசாலை நூலக பொறைார்ச்சி அலகின் கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரிய நூலகர்களுக்கு இருக்க வேண்டிய பல பொறுப்புக்களை வரையறுத்துள்ளனர்.

1. இவர்களிடம் நூலக அறிவு, அதனைக் கையாள்தல், புதிய தொழில் நுட்பம், கற்கை அறிவியல், பாடசாலைக் கலைத்திட்டம் போன்றவற்றின் பற்றி அறிவு காணப்பட வேண்டும்.
2. பாடசாலைகளில் செயற்படுத்தப்படும் பாடத்திட்டத்திற்குத் தேவையான விபரங்களைத் தேடித்தரல்.
3. பாடத்திட்டம் தொடர்பான சிறு விளக்கங்களைக் கூறுதலும், விபரங்களை காட்சிப்படுத்தலும்.
4. பாடசாலை சமூகத்தின் வாசிப்புத்திறனை மேம்படுத்த வேண்டிய வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
5. பாடசாலை நூலக வளங்களைப் பயன்படுத்தும் முறைகள் பற்றி விளக்குதல்.
6. கற்றல் - கற்பித்தலுக்கான புதிய தொழில்நுட்பக் கருவிகளை பயன்படுத்துவதற்கான வழிகளைச் செய்தல்.
7. மாணவர்களிடையே வாசிப்பதை ஊக்கப்படுத்தல்.
8. பாடசாலை நூலகங்களை வளப்படுத்தல் பற்றி பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளல்.
9. பாடசாலை நூலகம் அதன் செயற்பாடு பற்றி பாடசாலையினர் மற்றும் பொது மக்களுக்கு அறிவித்தல்.
10. நூலக வளர்ச்சிக்குத் தேவையான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

இவ்வாறான பணிகளை ஆசிரிய நூலகர்கள் ஆற்ற வேண்டும். "எல்லோருக்கும் நிறைவான கல்வி" என்றடிப்படையில் மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் - பாடசாலை சமூகத்தினர் - ஊரவர்கள் ஆகியோரின் தேவைகளை நிறைவு செய்யும் ஒரு நிலையமாக பாடசாலை நூலகங்கள் திகழ வேண்டும்.

எனவே தான் இப்பாரிய பொறுப்பை ஆசிரிய நூலகர்கள் சிந்தித்து செயற்படும் போது அறிவுப் பொக்கிஷங்களான நூல்களுடன் மாணவர்களை சிறுபராயம் முதல் கொண்டே உறவாடச் செய்யும் மனப்பாங்கை வளர்த்து

அமைவதன் மூலம் அறிவுபூர்வமான நாகரீகமுடைய சந்ததியினரை உருவாக்குவதோடு அதிகமாக எதிர் கொண்டு வரும் உளப்பிரச்சினையற்ற ஆரோக்கியமான சமூகத்தையும் வளர்த்தெடுக்க முடியும் என்பதில் நாம் ஐயப்படத் தேவையில்லை.



T. MARY THEVA SELSI



# நல்ல நூல்களைக் கற்போம்.

தற்போது செய்தித்தாள்களை சில நொடிகளில் புரட்டிவிட்டுச் செல்வதும், விரல் நுனியில் உலகம் எனக் கூறிக் கொண்டு கணினியின் முன் அமர்ந்து நுனிப்புல் மேய்வது போல செய்திகளைப் படிப்பதும், நிகழ்வுகளைப் பார்ப்பதும் வாசிப்பாளர்களிடையே அதிகமாகக் காணப்படுகின்றன. ஒரு செய்தி அல்லது நிகழ்வு எதனை வெளிப்படுத்த முனைகிறது, அதன் மூலமாக புரிந்து கொள்ள வேண்டியது என்ன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதற்குப் பின்னர் அடுத்த செய்தி அல்லது நிகழ்வினைப் படிக்க ஆரம்பிக்கும் போது அதன் அடிப்படைக் கருத்துக்கள் தெளிவாக மனதில் பதிந்து விடும். காட்சி ஊடகத்தில் செய்திகளைப் படிக்கும் போதோ, நிகழ்வுகளைப் பார்க்கும் போதோ அவை உள்ளது உள்ளவாறே மனதில் பதிந்து விடும்.


நாளிதழ்களில் மேம்போக்காக தலைப்புச் செய்திகளை மட்டும் பார்த்துவிட்டுச் செல்வதைத் தவிர்த்து சற்று உன்னிப்பாகப் படித்தால் பல புதிய சொற்களையும் தெரிந்து கொள்ள வாய்ப்புள்ளது. அரசியல் தொடங்கி அறிவியல் வரை ஒவ்வொரு துறையிலும் அவ்வப்போது பல புதிய சொற்கள் உருவாகின்றன. தொடர்ந்து படித்தால் தான் அவ்வப்போது அறிமுகமாகின்ற புதிய சொற்களைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் இன்றைய இளையவர்கள் அதற்கெல்லாம் தேவையில்லை, வாசித்து என்ன ஆகப் போகிறது? அவ்வப்போது இணையத்தளங்களில் பார்த்து விடுகின்றோம். என்றெல்லாம் கூறுவதைத் தவிர்க்க வேண்டும். பொதுவாகவே ஒரு நடைமுறை எம்மவரிடம் காணப்படுகின்றது. தமக்கு பிடித்தமான குறிப்பிட்ட சில பகுதிகள் வெளிவரும் நாள்களில் மட்டுமே செய்தித்தாள்களை வாங்குகின்றனர். இந்த நிலை மாற வேண்டும். அவர்களின் விருப்பத்துக்கு ஏற்றவாறு ஏதேனும் ஒரு செய்தித்தாளைத் தெரிவு செய்து, அதனைத் தினமும் படிப்பதை நடைமுறையில் கொள்வது நல்லது. அப்பொழுதான் நாட்டு நடப்புக்களை அறிந்து கொள்ள முடியும். என்றாவது ஒரு நாள் படிக்காமல் விட்டு விட்டால் அன்று வந்திருந்த முக்கியமான செய்தியையோ கட்டுரையையோ நாம் இழக்க நேரிடும்.

கியூபா அதிபர் பிடல்காஸ்ட்ரோ தினமும் 300 பக்கங்களைக் குறையாமல் உலகச் செய்திகளைப் படிப்பாராம். பல அரசியல் பிரமுகர்களும், வேறு பல துறையைச் சார்ந்தவர்களும் தினமும் படிப்பதையும் எழுதுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளார். உள்ளூர் செய்தி தொடங்கி உலகச் செய்திகள் வரையில் அறிய நாள் தோறும் குறைந்தது 30 நிமிடங்களையாவது நாளிதழைப் படிப்பதற்காக ஒதுக்குவது நல்லது. அவ்வாறே நூல்களைப் படிப்பதற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். கதைகள், கட்டுரைகள், சாதனையாளர்களின் வரலாறு, ஆன்மீகம், கலை, இலக்கியம், அறிவியல், பயணக்கட்டுரைகள் என்பன பல வகையான நூல்களாகும். நூல் படிக்கும் பழக்கத்தை மேற்கொள்ளும் முன்பாக எந்த நூலைப் படிக்க வேண்டும் என்ற ஐயம் மனதில் தோன்றும். பல நூல்களைப் படிக்கப் படிக்க நாளடைவில் தானாகவே எந்த நூலைப் படிப்பது என்ற தெளிவு கிடைத்துவிடும். நூல் என்பது நமக்கு சிறந்த நண்பன் என்பதை மனதில் கொண்டு நாளிதழை வாசிக்க நேரம் ஒதுக்குவதைப் போல தினமும் 50 பக்கங்களைக் குறையாமல் ஏதாவது ஒரு நூலைப் படிப்பது நல்லது.

படிப்பதால் மனம் தெளிவாகிறது. நினைவாற்றல் பெருகிறது. நற்சிந்தனை மேம்படுகிறது. நாளிதழைப் படிப்பதால் அன்றாட நிகழ்வுகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது. அவ்வாறே நூல்களைப் படிக்கும் போது நமக்குள் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலிட ஆரம்பிக்கிறது. நாளிதழையோ, நூலையோ படித்து முடித்த பின்னர் நண்பர்களிடமும் குடும்பத்தாரிடமும் படித்ததை பற்றி விவாதிக்கலாம். அதன் மூலம் பல புதிய கருத்துக்களை பரிமாறிக் கொள்ளலாம். புதிய சொல், புதிய செய்தி, புதிய உத்தி, புதிய நடை புதிய வரலாறு என்று ஒவ்வொரு நிலையிலும் ரசித்து ரசித்துப் படிக்கலாம்.

இதுவரை இப்பழக்கம் இல்லாதவர்கள் வாசிப்புப் பழக்கத்தை இன்று முதல் தொடங்கலாம். நண்பர்களையும் இவ்வித பழக்கத்தை மேற்கொள்-ள

அறிவுறுத்தலாம். வாசிப்புக்கென நேரத்தை ஒதுக்கி வீட்டில் ஒரு நூலகத்தை உருவாக்கி நூல்களின் எண்ணிக்கையைப் பெருக்கினால் வீடும் நாடும் வளம் பெறும்.



எ. ரவிராஜ்
8 B



## நூலகம்- - - -

### முன்னுரை

நூல்களின் காப்பகம் அல்லது தொகுப்பு நூலகமாகும். நூல்களைப் படிப்பது மிகச் சிறந்த பழக்கமாகும். இந்தப் பழக்கத்தை வளர்த்துக் கொள்வதால் நம் அறிவை விருத்தியடையச் செய்கிறோம். பிறரின் அனுபவத்தையும் நமதாக்க முடியும். மிகக் குறைந்த செலவில், அதே நேரத்தில் பயனுள்ள முறையில் பொழுது போக்காகவும் அமைகிறது. எனவே நூலகத்தைப் பற்றி சிறிது இங்கு காண்போம்.

### ஒழுங்கான ஏற்பாடு

நூலகம் என்பது புத்தகங்களின் குவியல் அல்லாமல் மாறாக வரிசைப்படியான ஏற்பாடு அல்லது ஒழுங்கு படுத்தல் ஆகும். மொழி, துறைகள், தலைப்பு, வெளியீட்டாளர் போன்றவற்றின் வரிசையின்படி அடுக்கப்பட்டு எண்கள் இடப்பட்டிருக்கும்.

நூலகத்தில் புத்தகம் எடுக்கச் செல்லும் போது நாம் உள்ளடக்கப் பட்டியலைப் பார்த்து, நமக்குத் தேவையான புத்தகங்களைக் குறிப்பிட்டுப் பெற முடியும்.

### நூலக அறிவின் வரலாறு

பல துறைகளைச் சார்ந்த, பல்வேறு தலைப்புகளின் நூல்களைப் படிப்பதால் மனித அறிவு வளர்ச்சி அடைகிறது. புத்தகங்களின் வழி நாம் கண்ணால் காண்முடியாத பலவற்றைப் பற்றி அறிந்து கொள்கிறோம். நாம் இதுவரையிலும் கேள்விப்படாத பல நிகழ்ச்சிகள் அல்லது செய்திகளைப் பற்றி அறிந்து கொள்ள நம்மால் முடிகிறது. ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி அல்லது

பொருளைப் பற்றிய புதிய விவரங்களை இங்கு தேடாமல் எம்மால் பெற முடிகிறது.

## நூலகம் அனுபவத்தின் ஊற்று.

"அனுபவமே சிறந்த ஆசிரியர்" என்பர் நம் முன்னோர்கள். ஏனெனில் அனுபவம் நம் அறிவை நிலையானதாகவும், தெளிவுடையதாகவும் மாற்றுகிறது. நேரடி அனுபவத்தை நாம் என்றும் மறந்து விடுவதில்லை.

"தொட்டால் சுடும் நெருப்பு" என்பதற்கும் நேரடி அனுபவம் வேண்டும் என்பது கட்டாயத்தேவையல்லத்தனம். எனவே புத்தகங்களை வாசிப்பதால் பிறருடைய அனுபவத்தையும் நாம் நமதாக்கிக் கொள்ள முடியும்.

## நூலகத்தின் பயன்கள்?

நூலகம் நம் அறிவை வளர்த்துக் கொள்ளவும், பிறருடைய அனுபவங்களை நமதாக்கிக் கொண்டு, அதற்கேற்ப நம் வாழ்வை அமைத்துக் கொள்ளவும் நம் வாழ்க்கையை நாமே திட்டமிட்டு நேர்மையாகவும், தூய்மையாகவும் நடத்தவும் நமக்குத் தான் பயன்படுகிறது. பல வகையான நூல்களை நாம் படிக்க நமக்கு உதவுகிறது நூலகம். நம்மால் விலைகொடுத்து வாங்க முடியாத பல உயர்ந்த விலையுள்ள நல்ல நூல்களை நாம் பயன்படுத்த நமக்கு உதவுகிறது நூலகம்.

மனிதன் பிறப்பது உலகில். ஆனால் அறிவாளர்கள் பிறப்பது நூலகத்தில் தான். நூலகத்தைப் பயன்படுத்தி அறிவுடை மனிதராய் வாழ்வோம்.

நன்றி

சு. அருணா (2016) Arts.

## இன்றைய சிந்தனைக்கு......

01. எல்லோரும் உலகத்தை மாற்ற நினைக்கின்றார்கள்.
தன்னை மாற்ற எண்ணுவதில்லை
தன்னை மாற்றும் நிலையை உருவாக்க வேண்டும்.

02. மிகக் கடினமானவை
இரகசியம் காப்பது.
இழைக்கப்பட்ட தீங்கை மறப்பது.
ஓய்வை உயர் வழியால் பயன்படுத்துவது.

03. மௌனமாகப் பேசு, அது உன் இரகசியங்களைப் பாதுகாக்கும். நல்ல நண்பனைத் தேடு. அது உன் நடத்தையைப் பாதுகாக்கும்.

04. மற்றவர் நினைப்பது நான் ஒரு கோபக்காரி என்று ஆனால் உள்ளுக்குள்ளே நான் ஒரு சாந்தமானவள்.

05. தன்னிடம் நம்பிக்கை வைத்திருப்பவன் தான் மற்றவர்களின் நம்பிக்கையைப் பெற முடியும்.

## படித்ததில் பிடித்தவை.....

- நான் யாருக்காகவும் காத்திருப்பேன். ஆனால் யாரும் எனக்காகக் காத்திருக்க கூடாது.
- தன்னை அறிந்தவன் ஆசைப்பட மாட்டான். உலகை அறிந்தவன் கோபப்பட மாட்டான். இரண்டையும் அறிந்தவன் கஷ்டப்பட மாட்டான்.
- உனக்காக உண். பிறருக்காக உடுத்து. எல்லோருக்குமாக உழை.
- கல் கூட செதுக்கினால் தான் அழகு. மலை கூட உயரமாக இருந்தால் தான் அழகு. இமை கூட மூடினால் தான் அழகு. கண்ணீர் கூட சிந்தினால் தான் அழகு. வியர்வை கூட நிலத்தில் விழுந்தால் தான் அழகு.

J. ஜோசப்நந்தஜன்
9B.

# எனது எதிர்காலம்.

கள்ளமற்ற கண்களோடும்
களங்கமற்ற உதட்டோடும்
கறையற்ற நடத்தையோடும்
கணக்கற்ற ஆசையோடும்.

கவனமாய் கண்ணியமாய்
கவலையின்றி கலித்தின்றி
கணப்பொழுதும் கற்று வரும் கல்விக்கு
வருங்காலம் என்னை உயர்த்தும்.

வருங்காலம் உருவாக்கும்
குறைவற்ற கல்வி யொன்றை
நிறைவாக கற்றதினால்
நிம்மதியாய் தலை சாய்த்து
கண்மணியாய் துயில் கொள்வேன்.

எழுதுகோல் பிடிப்பதற்கும்
ஏடொன்றை திறப்பதற்கும்
வண்மொழியாம் தமிழ் மொழி
வாழ்த்தி வரவேற்கும்.

தமிழால் நான் புகழ்பாடும்
தமிழ்த்தாய் கைவிடாது
தலை நிமிர்ந்து தாலாட்டும்
எதிர்காலம் என்னை எட்டும்.

J. மைடோன்ராஜ்
A/L (2016) Maths.

# " வாசிப்பு மனிதனை பூரணமாக்கும் "

மனித வாழ்க்கைக்கு கல்வி மிக அத்தியாவசியமானது. இக் கல்வியை பெறுவதற்கு சிறந்த ஆதாரமாக வாசிப்பு விளங்குகின்றது. நாம் ஒரு விடயத்தை வாசித்து அறிவைத் தேடும் போது தான் மனித வாழ்வு செழிப்படைகின்றது. மனிதன் மனிதனாகின்றான். இவ்வுண்மையைத் திருவள்ளுவர் " விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர் " எனக் கூறுகின்றார். இதன் மூலம் கல்வி அறிவு உடையோரே மனிதர் என்றும் கல்லாதோர் விலங்குகள் என்றும் கூறுகின்றார். மனிதனை மனிதனாக மாற்றும் மாண்புடைய கல்வியைப் பெறுவதற்கு காட்சி, அனுபவம், கேட்டல் போன்ற வழிகள் இருந்தாலும் வாசிப்பே தலை சிறந்தது நூலே. என்பதில் ஐயமில்லை. என்றும் அந்நூல்களை பொருளுணர்ந்து வாசிப்பதாலே பயன் கிடைக்கின்றது. எனவே வாசிக்கும் பழக்கமே கல்வியின் அடித்தளமாக உள்ளது.

" இளமையில் கல்வி சிலையில் எழுத்து " என்பார்கள். மாணவர்கள் இளமையிலிருந்தே கல்வியைக் கற்கும் போது கல்வியானது சிந்தாமல் சிதறாமல் மனதிலே நன்றாகப் பதியும். எனவே தான் கல்விக்கு அடித்தளமாக விளங்கும் வாசிப்பை இளமையிலிருந்தே வளர்க்க வேண்டும். அப்போது தான் கல்வி எம் மத்தியில் தங்கும். திருவள்ளுவ நாயனார் " கண்ணுடையோர் என்போர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையோர் கல்லாதவர் " எனக் கூறுகின்றார். இதன் மூலம் கல்வியைப் பெற்றோர் கண்ணுடையவர் என உயர்வாகப் போற்றப்படுகின்றனர். அத்தகைய கல்வியைப் பெறுவதற்கு வாசிப்பை ஆதாரமாகக் கொண்டு கல்வியைக் கற்போம்.

மனிதன் மொழியாற்றலை முன்னேற்றம் காண்பதற்கு முதலையாகவும், திண்மை நிலையாகவும் வாசிப்பு அமைகின்றது. நூல்களை முழுமையாக வாசிக்கும், கருத்தை விளங்கிக் கொள்ள, விளங்கிய கருத்தை வெளிப்படுத்தல் ஆகிய திறன்களும் மொழித் தேர்ச்சியில் அடங்கும். ஒரு கருத்தை வாசித்து விளங்கி வெளிப்படுத்தும் ஆற்றலே மெய்யான மொழியாற்றலாகும். ஒரு விடயத்தை வாசிப்பதன் மூலம் கருத்தை " உள்ளங்கை நெல்லிக்கனி போல " விளக்கமாகக் கூறலாம். மாணவர்களது கல்வி பாடசாலையில் பயிலும் பாடங்களோடு மாத்திரம் நிற்பதில்லை. குறையற்ற கல்வியால் பாடசாலைக் கல்வி சிறு அளவானதாகும். அக் கல்வியால் மாணவரது அறிவுத்திறன் பெருகாது

என்பது தெளிவு. எனவே மாணவன் பாடநூல்களைக் கற்பதோடு மாத்திரமல்லாமல் பற்பல நூல்களை வாசிக்கவும் வேண்டும் "கண்டதும் கற்கப் பண்டிதன் ஆவான்" என்பது பழமொழி. எனவே நாம் நல்லன எவையென அறிந்து வாசிக்க வேண்டும்.

வாசிப்புத் திறனில் தேர்ச்சி பெற்ற ஒருவரது உள்ளம் தணியாத பசி கொண்டது. எத்தனை எத்தனை நூல்களை வாசித்தாலும் பசி அடங்காது. இவ்வாறு வாசிப்பதன் மூலம் அறிவும் ஆவலும் வளர்கின்றது. எனவே இணையத் தளங்கள் போல கிடைக்காத பலவேறு அறிவு சார்ந்த நூல்களைக் கற்பதனால் வாழ்வனையும் மாற்றங்களையும் புலப்படுத்துவதோடு வாழ்வின் பல கோணங்களையும் ஆராய்வதோடு புதிய அனுபவங்களையும் பெறுகின்றோம். அத்தோடு நல்லவை எவை தீயவை எவை எனவும் பகுத்து அறிவதோடு எதிர்கால வாழ்விற்கு எம்மை ஆயத்தம் செய்கின்றோம். எனவே வாசிப்பின் பயன்களை அறிந்து வாசிப்பின் மூலம் புத்துணர்வுடன் வாசிப்புத் திறனை மேலும் விருத்தி செய்வோம்.

A. றெஜிக்கா ஜெனீஸா.
A/L (2016) ARTS.

# புத்தகம் படிக்கும் பழக்கம்

இளம் பிராயத்திலேயே புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டவனைப் போன்ற மகிழ்ச்சியான மனிதன் இருக்க முடியாது. வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சியாக இருக்கக் கூடிய வழியை அவன் கண்டு பிடித்து விட்டான் என்று அர்த்தம். சோர்வு ஏற்படுகின்ற போது அவனுக்கு வேறு துணை தேவையில்லை. புத்தகங்களை அவன் நாடிச் சென்று விட முடியும். ஆங்கில கவிஞன் ஒருவன் "என்னை எந்த சந்தர்ப்பத்தி-லும் கைவிட்டு விடாத நண்பர்கள் புத்தகங்களே" என்று கூறுகின்றான்.

புத்தகங்கள் படிக்கும் பழக்கம் உடையவர்களை தனிமை என்பது ஒரு போதும் நெருங்காது. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் புத்தகங்களை அவர்கள் நாடிச்சென்று விட முடியும். வாழ்க்கையில் கவலையோ, சோர்வோ ஏற்படுகின்ற போதெல்லாம் விரும்பிய புத்தகங்களை படித்து அவர்களால் அவற்றைப் போக்கிக் கொள்ள முடியும்.

ரஸ்கின் என்கின்ற ஆங்கில அறிஞர் "புத்தகங்களைப் போன்ற சிறந்த செல்வம் எதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது" என்று கூறுகின்றார். வேறு செல்வங்களை கள்வர் களவாடிச் சென்று விடலாம். ஆனால் புத்தகங்கள் பொதுவாக களவாடப்படுவதில்லை. புத்தகங்களால் ஒருவன் பெற்ற இன்பங்களை-யும் மற்றவர்கள் தட்டிப் பறித்து விட முடியாது. படிக்கின்ற பழக்கம் இல்லாதவனின் வாழ்க்கை சூன்யமாகிப் போய்விடுகிறது.

புத்தகங்களைக் கட்டம் போதாது நல்ல புத்தகங்களாகத் தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும். அப்போதுதான் நாம் விரும்பிய மனநிறைவை அது கொடுக்கும். சில புத்தகங்களை மகிழ்ச்சிக்காகவும் பொழுது போக்கிற்காகவும் நாம் படிக்கின்றோம். பெரும்பாலான நாவல்கள் இந்த வகையில் அடங்கும். கற்பனை வளம் நிறைந்த இந்த நாவல்கள் படிக்கத் தகுந்தவை என்பதில் சந்தேகம் இல்லை. மனச்சோர்வு நிலையிலோ இம்மாதிரிப்புத்தகங்களை படிப்பது நல்ல பொழுதுபோக்குத்தான்

ஆனால் கற்பனைக் கதைகளை மட்டும் படித்து விட்டு, வேறு புத்தகங்களை ஒதுக்குவது நல்ல பழக்கம் அல்ல. இனிப்பு பண்டம் எவ்வளவு சுவையாக இருந்தாலும் அதையே சாப்பாடாக்கொண்டிருக்க முடியாது. உடல் ஆரோக்கியத்திற்கு பரிபூரண உணவு தேவை. அதுபோல மன ஆரோக்கியத்திற்கு நல்ல சிந்தனைகள் அடங்கிய புத்தகங்களை படிப்பது அவசியம். இந்தப்புத்தகங்களை விருப்புக்கு ஏற்றபடி நாம் தேர்வு செய்து கொள்ள முடியும்.

வரலாறு, வாழ்க்கை வரலாற்று நூல்கள், தத்துவம், மதம் சம்பந்தப்பட்ட நூல்கள் பயண நூல்கள், விஞ்ஞானம் பற்றிய நூல்கள் இவை பல்வேறு நூல்களையும் நாம் படிக்க வேண்டும். இம்மாதிரி நூல்களைப் படிப்பது மகிழ்ச்சி அளிப்பதோடு நம்முடைய அறிவையும் வளர்த்துக் கொள்ள உதவுகின்றன.

உயரிய ஞானம் நிரம்பிய புத்தகங்களை படிக்கின்ற பழக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். ஒருமுறை கற்கப்பழக்கம் ஏற்பட்டு விட்டால் அதன் மூலம் கிடைக்கின்ற இன்பம் நிரந்தரமானதாக இருக்கும். இத்தகைய இன்பத்தை பொழுது போக்கு புத்தகங்களிலிருந்து நாம் ஒரு போதும் பெற முடியாது

புத்தகங்களை போன்ற சிறந்த நண்பர்கள் கிடைப்பது அரிது நண்பர்கள் மனமாற்றம் அடைந்து நம்மை விட்டு பிரிந்து விடலாம் ஆனால் புத்தகங்கள் என்றுமே நம்மோடு கலந்துரையாடக் காத்திருப்பவை. நம்மை இவை கோபித்து கொள்வதில்லை நம்மை பழிப்பதில்லை என்று ஒதுக்கி வைப்பது இல்லை.

நமக்கு இன்பம் தர எப்போதும் தயாராக காத்திருக்கின்றன, நமக்கு அறிவு புகட்டும் ஆசானாக புத்தகங்கள் அமைந்திருக்கும் போது அந்த வாய்ப்பை நாம் நழுவவிடலாமா? ஒவ்வொருவரும் புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதை ஒரு முக்கியமான கடமையாக கருத வேண்டும்.

ஆக்கம் :- சு. ஜெனா
கலைப்பிரிவு (2016)
யா/ புனித அந்தோனியார்
கல்லூரி

## பத்துமாதம் கருவாய் சுமக்கையில்

வாந்தியும் தலைச்சுற்றும்
மயக்கமும் மசக்கையுமாய்
பல அவஸ்தைகளைத் தாங்கி
பல நாழிகை துடித்துப் பெற்று
படைத்தாய் கடவுளானாய்!

கண்ணுக்குள் எண்ணெய் விட்டு
கண்மணிக்குள் சாலையாக்கி
இரவு பகல் பாராமல்
கண்ணுறாது காத்து
கருப்புப் பொட்டு வைத்து
காத்தாய் கடவுளானாய்!

பத்தியம் காத்து உதிரத்தை
பாலாக்கி பருக வைத்து
பள்ளிக்கூடம் அனுப்பி
பாட்டு கதை சொல்லி
பட்டம் பதவி வாங்க வைத்து
ஆனாய் கடவுளானாய்!

உன் கஷ்டங்கள் அனைத்தும்
உனக்குள் மறைத்து
மறைத்தாய் கடவுளாய்
என் சந்தோஷத்துக்காக
உன் சந்தோஷங்களை அழித்து
அழித்தாய் கடவுளானாய்

கொண்டவனின் ஆத்மாவை
ஆதாயமாக நீ செய்துவரும்
'சாமி கும்பிடு' என்று
கட்டுப்பாடுகளைச் சுட்டிக்
காட்டுகிறாயே! நீதான்
என் கண்கண்ட தெய்வம்.

K. Gowshika.
A/L 2017 ARTS

# நன்றியுரை

யா/புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறும் 2015ம் ஆண்டிற்கான தேசிய வாசிப்பு மாதத்தில் எம்மால் வெளியிடப்பட்ட "வாசகன் இதழ் 03" என்ற எம் சஞ்சிகையை ஆக்குவதற்கு அனுமதி அளித்த எம் கல்லூரி முதல்வருக்கு எம் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இவ் சஞ்சிகையை வெளியிடுவதற்கு அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் எம் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி



